# இலக்கியச் சுவை

ப. ஜீவானந்தம்



# இலக்கியச் சுவை

# இலக்கியச் சுவை

ப. ஜீவானந்தம்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

முதற் பதிப்பு : மார்ச், 1967
இரண்டாம் அச்சு : ஜூன், 1992
மூன்றாம் அச்சு : செப்டம்பர், 1992
உரிமைப் பதிவு
Code No. A 479

விலை: 12-00

ISBN : 81-234-0090-X

அச்சிட்டோர் :
ஜனசக்தி அச்சகம்,
161, பிரகாசம் சாலை
சென்னை-600 108.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| புதிய சூழ்நிலையும் புதிய கடமையும் .... | 1 |
| சங்கரதாஸ் ஸ்வாமிகள் .... | 13 |
| கம்யூனிஸ்டுகளும் கலை இலக்கியமும் .... | 26 |
| கவிமணிக்கு அஞ்சலி .... | 37 |
| ரகுநாதன் கவிதைகள் .... | 46 |
| கம்பனும் மில்டனும் .... | 62 |
| வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் .... | 71 |
| மகாகவி இக்பால் .... | 78 |
| சாமி சிதம்பரனார் .... | 92 |

# பதிப்புரை

இலக்கியத்தை எப்படிச் சுவைப்பது; கலைகளை எப்படி ரசிப்பது?- இந்த இரு கேள்விகளுக்கு விடையளிக்கின்றது இந்நூல்.

'பண்டைய இலக்கியங்களில் எதுவும் இல்லை; அவை தீயிட்டுப் பொசுக்கத் தகுந்தவை,' என்று கூறுவதோ 'பண்டையப் படைப்புக்களில் தான் எல்லாம் இருக்கிறது' என்று பழம் பெருமையை மட்டும் பேசுவதோ, தவறு என்பதைச் சுட்டிக் காட்டுகிறது இந்நூல்.

கம்பன், வள்ளுவன், இளங்கோ போன்ற பழம்பெரும் மேதைகளை உச்சி மேல் வைத்து மெச்சியும் பாரதி, தாகூர், இக்பால், மாக்சிம் கார்க்கி போன்ற இந்நாள் அறிஞர்களை மனமாரப் போற்றியும் வாயாரப் புகழ்ந்தும் வந்தவர் அமரர் ஜீவா.

"மனிதன் என்ற இந்தச் சொல் மனிதன் கண்ட சொற்களிலேயே உயர்வான சொல்"—என்று கூறிய

மாக்சிம் கார்க்கியின் மனிதாபிமானப் பார்வை ஜீவாவின் இலக்கிய ஆய்வுக்குச் செப்பனிட்டுத் தந்தது.

அந்தச் சீரிய பார்வையிலே அமரர் ஜீவா அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் 'ஜனசக்தி', 'தாமரை' ஆகிய இதழ்களில் எழுதிய சில இலக்கிய கட்டுரைகளின் சுவைமிக்க தொகுப்பு இது. பத்திரிகையில் வெளிவநத இக் கட்டுரைகளை பிரதி எடுத்து சேகரித்து உதவிய தோழர் டி.எஸ். நடராஜன் அவர்கட்கும், பிரதியை சரிபார்த்துக் கொடுத்த தோழர்கள் நா. வானமாமலை, அறந்தை மு. நாராயணன் அவர்கட்கும் எமது நன்றி உரியது.

—பதிப்பகத்தார்

# இலக்கியச் சுவை

## புதிய சூழ்நிலையும் புதிய கடமையும்

[பாக்குக் கடிக்கிற நேரத்தில் திரைப்படக் காட்சிகள் கடுவேகத்தில் வந்து மறைவதுபோல் சிற்சில காட்சிகள் என் சிந்தனை ஓட்டத்தில் தோன்றி மறைந்தன. பொங்கல் மலருக்கு ஒரு கட்டுரை தீட்டிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் என் சிந்தையில் மோதியதும் எழுந்த எதிரொலிகளே இவை]

நம்பி நெடுஞ்செழியன் ஓர் குறுநிலத் தலைவன். அவன் அறத்துறை, பொருள்துறை, இன்பத்துறை முதலிய எல்லாத் துறைகளிலும் மாசறக் கடைபோகி மாண்பு அடைந்தவன், சுருக்கத்தில் அவன் செய்யத் தகுவன எல்லாம் செய்து சிறப்பு அடைந்தவன்.

இந்த நெடுஞ்செழியன் எதிர்பாராத வகையில் உயிர் துறந்தான். வேல், வாள் முதலிய எத்தகைய படைக் கலங்களாலும் புண்பட்டு இறந்தானில்லை. பிறர் படைக் கலங்களால் தாக்குண்டு இறவாமல் எமனுக்கு இரையாகிற வர்கள் 'நோலாதவர்கள்' என்பது அக்காலக் கருத்து. எனவே, அவ்வாறு இறந்தவர்கள் உடம்பை அடக்கம் செய்யுங்கால் படைக்கலத்தால் போழ்ந்து நிலத்தில் புதைக்கவோ அல்லது சுடவோ செய்வது அக் காலத்து பழக்கம்.

எதிர்பாராத வண்ணம் உயிர் துறந்த நெடுஞ்செழியனைக் கண்டு எவ்வாறு அடக்கம் செய்வதென்று புரியாதவர்களாய் அங்கு கூடியிருந்த சான்றோர்கள், பேரெயில் முறுவலார் என்ற நல்லிசைச் சான்றோரை, நோக்கி அறிவுரை வழங்குமாறு வேண்டினார்கள். முறுவலார் கூறினார்: ''நெடுஞ்செழியன் காதல் அரம்பையர் போல் இளம் கன்னியரோடு இன்பம் துய்த்தான், பல்வேறு நறுமண மலர்களைச் சூடினான். குளிர்ந்த மணங்கமழும் சாந்து பூசினான், பகைஞரை வேரோடும் வேரடி மண்ணோடும் கெடுத்தான். நண்பர்களை உச்சிமேல் வைத்து மெச்சினான். வலியார் என்பதற்காக எவர்க்கும் வால் பிடித்தானில்லை. மெலியார் என்பதற்காக எவரையும் இழித்துப் பழித்தானில்லை. ஈ எனச் சொல்லி யாரிடமும் இரந்து அறியான். இல்லையெனச் சொல்லி தன்னிடம் இரந்தோர்க்கு மறுத்தும் அறியான். அரச அவையில் உயர் புகழ் ஓச்சி நின்றான். தாக்க வரும் படைகளைத் தன் எல்லையுள் புகாமல் எதிர் நின்று தடுத்தான். தப்பினோம் பிழைத்தோமென்று ஓடும் படைகளைத் துரத்தியடிக்க நினையான். நால்வகைப் படைகளைத் திறம்பட நடத்தினான். இனிய பொருள்கள் பலவும் பலர்க்கும் வரையாது வழங்கினான். பாணர் போன்ற கலைத் தொண்டர்களுக்குப் பசி தீர்த்துப் பாதுகாப்பு ஈந்தான். பேச்சில் மயக்க தயக்கமின்றி நடுவு நிலைமையில் உறுதி கொண்டு நின்றான். இவ்வாறு செய்யத் தகுந்தவற்றையெல்லாம் செய்தான். ஆகவே, இத்தகைய புகழ்க் காதலனாகிய நெடுஞ்செழியன் சடலத்தை எவ்வாறு அடக்கம் செய்யினும் செய்க. அதனால் அவன் புகழுக்கு ஊறு ஒன்றும் நேராது.

இனி பாடல்:

''தொடியுடைய தோள் மணந்தனன்
கடிகாவில் பூச்சூடினன்
தண்கமழும் சாந்து நீவினன்

செற்றோரை வழி தபுத்தனன்
நட்டோரை உயர்வு கூறினன்
வலியரென வழி மொழியலன்
மெலியரென மீக் கூறலன்
பிறரைத் தான் இரப்பறியலன்
இறந்தோர்க்கு மறுப்பு அறியலன்
வேந்துடை அயைத்து ஓங்குபுகழ் தோற்றினன்
வருபடை எதிர் தாங்கினன்
பெயர்படை புறங் கண்டனன்
கடும்பரிய மாக் கடவினன்
நெடுந்தெருவில் தேர் வழங்கினன்
ஓங்கு இயல் களிறு ஊர்ந்தனன்
தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்
பாண் உவப்பப் பசி தீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன்; ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன்; ஆகலின்
இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படுவழிப்படுக! இப்புகழ் வெய்யோன் தலையே''

எடுத்த எடுப்பில் இந் நிகழ்ச்சி என் எண்ணக் கடலில் குதித்தது.

பல துறையிலும் சிறந்த, நிறைந்த வாழ்வை உண்டு உவந்த அருந் தமிழனின் வாழ்வை என் சிந்தனை சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. சங்கப் பொற்காலத் தமிழன் உலகியல் வாழ்வில் எவ்வாறு வேரூன்றி நின்று வெற்றி பெற்றான் என்பதை எண்ண எண்ண என் மனம் பூரித்தது.

கணமும் சுணங்காமல் மத்திய காலத்திற்குப் பறந்தது; கம்பனை நினைந்தது.

இராம காதை கையடைப் படலத்தில் இருந்தே தொடங்குகிறது. கம்பன் 'பால காண்டத்தின்' முகப்பில் ஆற்றுப் படலம், நாட்டுப்படலம், நகரப் படலம் அரசியல் படலம் ஆகியவற்றின் மூலம் தனது கற்பனைக் கைச்

சரக்கைக் கண்காட்சி வைக்கிறான். நகரப் படலத்தில் கோசல நாட்டின் நடுநாயகமான அயோத்தி நகரைப் பட்டம் பிடித்துக் காட்டுகிறான். கல்வியில் பெரியவனான கம்பன், பல்கலைப் பரிதியான கம்பன், கவிதா மாமேதை யான கம்பன் வாழ்வின் நடமாடும் அனுபவப் பெருங் களஞ்சியமாக ஒளிவீசிய கம்பன் அயோத்தி நகரில் பற்பல துறை வளங்களை அற்புதமாக பலப்பல பாடல்களில் சித்தரித்துக் காட்டுகிறான். அவன் தீட்டிக் காட்டிய புதிய கனவுலகச் சித்திரத்தில், இறுதியாக அவன் காட்டும் கைவண்ணம் என்ன தெரியுமா?

கல்வி என்னும் ஒரு வித்து அங்கு முளைத்தெழுகிறது. இந்த 'கேடில் விழுட் செல்வத்தி'லிருந்து எண்ணிறந்த கேள்விச் செல்வங்கள் என்னும் அழகிய சிறந்த வலிய கிளைகள் கிளைக்கின்றன. இவற்றின் வளர்ச்சியில் அருந்த வம்(கடுமையான முயற்சி)என்ற இலைகள் தழைக்கின்றன. அன்பாகிய அரும்புகள் அரும்புகின்றன. அறமாகிய மலர்கள் மலர்கின்றன. இன்ப வாழ்வு ஆகிய பழங்கள் பழுத்துக் குலுங்குகின்றன.

இதோ பாடல்:

“ஏகம் முதற் கல்வி முளைத்தெழுந்து எண்ணில்
கேள்வி
யாகும் முதல் திண்பணை போக்கி அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனியொன்று பழுத்தது போலுமன்றே”

[பால-நகரப் படலம்]

இந்த நிகரற்ற பாடல் என் நினைவைத் தாக்கிற்று. கல்வியும் கேள்வியும் கடுமுயற்சியும் மட்டும் போதா இன்ப வாழ்வை சமுதாய அளவில் முழு நிறைவாகத் துய்க்க கல்விச் செல்வமும் கேள்விச் செல்வமும் இணைந்து கடு முயற்சியைத் தழுவி அன்பைக் குழைத்து அறத்தின் கட்டுத்

திட்டத்தோடு வாழ்வு இயங்கும் பொழுதுதான் இன்ப வாழ்வு முழுமலர்ச்சி அடைய முடியும் என்ற சீரிய உண்மையைக் கம்பநாடன் நமக்குக் காட்டுகிறான்.

சிந்தித்தேன், மேலும் சிந்தித்தேன். மென்மேலும் சிந்தித்தேன். ‘என்றுமுள்ள தென்றமிழ்’ இயம்பிய கம்பன் என்றுமுள்ள சமுதாய வாழ்வுக்கான உண்மையை எவ்வாறு அழகு எனும் அழகுமோர் அழகுபெற எடுத்துக் காட்டுகிறான் என்பதை வளரும் தமிழினம் சிந்திக்க வேண்டுகிறேன்.

அடுத்தாற்போன்று, வழக்கமான உணர்வோடு என் சிந்தனை, பாரதி இலக்கியத்தை நோக்கிப் பாய்ந்தது.

“பாரதி செந்தமிழை வாழ்த்துகிறான். செந்தமிழ் நாட்டுப் பெருமக்களை வாழ்த்துகிறான். இந்நாள் எம்மைப் பிடித்து ஆட்டி அலைக்கும் இன்னல்களும் தீமைகளும் தீய சக்திகளும் ஒழிய வேண்டும் என்கிறான். தருமம் தழைக்க வேண்டும் என்றும் முழங்குகிறான், அனைத்திந்திய மக்கள் ஆண்மையோடு இயற்றும் அரும் பெரும் முயற்சிகள் அனைத்தும் வெற்றிமேல் வெற்றி புணைந்து நம் நாட்டின் நல்வாழ்வு நாள்தோறும் உயர வேண்டும் என்று வாழ்த்துகிறான்.

இதோ பாடல்:

“வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக!
நந்தேசத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!”

நாட்டில் நடைபெறுகிற, நடைபெறப் போகிற ஜன நாயக, சமதர்ம, சமாதான நன் முயற்சிகள் யாவற்றிற்கும் நல் வாழ்த்துக் கூறிய பாரதியின் தீர்க்க தரிசன ஒலி எனது சிந்தனையில் ஆழ்ந்து எதிரொலித்தது.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''
என்றும்

''இன்று சார்ந்த புலவர் தவவலியால் புகழ் ஏறிப்
புவிமிசை என்றும் இருப்பேன்.''

என்றும் பாரதி தமிழ்த்தாய் வாயில் வைத்து ஆணையிட்ட அமுத மொழி என் நினைவில் விழுந்ததும் நெஞ்சம் ஆனந்தக் கூத்தாடிற்று.

பட்டென்று மற்றொரு காட்சி மின்னிற்று.

டாக்டர் புரானோவஸ்கி 'பிரிட்டனில் தலை சிறந்த விஞ்ஞானிகளில், முன்னணி எழுத்தாளர்களில் முதல் வரிசையில் நிற்பவர்களில் ஒருவர். அப்பெரியார் அண்மையில் இரண்டாயிரம் மாணவ மாணவிகள் நிறைந்த ஒரு கூட்டத்தில் பேசினார். 'டெய்லி ஒர்க்கர்' என்ற பிரிட்டிஷ் தின இதழில் வெளிவந்த, நான் படித்த அவருடைய பேச்சு எனது நினைவில் அடுத்தாற்போன்று மோதியது.

அந்த விஞ்ஞானப் பெருந்தகை கூறிய சிற்சில மணிக் கருத்துக்களை மட்டும் கீழே தருகிறேன்.

''அணுசக்தி, தானே இயங்கும் யந்திரம், இடஆக்கிரமிப்பு, ராக்கெட்டுகள், (செயற்கை கோளங்கள்) ஆகியவற்றால் உருவாகிவரும் இரண்டாவது தொழில் புரட்சியை வெற்றிகரமாக நடத்தவல்ல ஒரு விரிந்த விஞ்ஞானக் கல்வி நிறைந்த ஜனநாயகத்தை நீங்கள் குறிக்கோளாக கொள்ள வேண்டும்.''

செயற்கைச் சந்திரன் போர்வெறி கொண்ட ஒரு கூட்டம் தளபதிகளால் படைத்துப் பறக்கவிடப்பட்டதன்று அது. 'விஞ்ஞானமே எதிர்காலம்' என்ற உணர்ச்சியும் ஊக்கமும் கொண்ட ஒரு நாட்டு மக்களால் படைக்கப் பட்டதாகும்.

1760-ல் நமது நாட்டில் (பிரிட்டனில்) இருந்த சூழ் நிலையும், இன்று சோவியத் யூனியனில் காணப்படும் சூழ் நிலையுமான சிறந்த சூழ்நிலை இன்று நம்மிடம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன். விஞ்ஞானம் நமக்குரியது என்ற உணர்ச்சி சமுதாயம் முழுவதிலும் கோடானு கோடி மக்களிடம் பரவிப் படர்ந்து கிடந்ததுதான் அந்தச் சூழ் நிலை. செயற்கைச் சந்திரன் ஒரு சிறிய வறண்ட தொழிற் கலைக் குழுவின் படைப்பு அல்ல. கணிதக் கலையின் அழகில் தொக்கிக் கிடைக்கும் மக்களால் பிணைக்கப் பட்டது அது''

''உலகத்திற்கு நாம் உரியவர்கள் என்ற உணர்வு கொண்ட ஒரு மகத்தான நாட்டின் மக்கள்தான் உலகத் தைச் சுற்றிவர செயற்கைக் கிரகத்தை அனுப்பியிருக் கிறார்கள். ரஷ்யப் பெருமக்களை இந்த உணர்வுதான் இயக்குகிறது. நாமும் அவர்களின் வழியில் இந்தஉணர்வைப் பெற்றாக வேண்டும்.

''வருங்காலக் குடிமக்களாகிய மாணவ மாணவிகள் சரித்திர, இலக்கிய அறிவைப் பெறுவது போன்று விஞ்ஞான அறிவிலும் திளைக்க வேண்டும் என்பது எனது வேணவா.''

''ஜனநாயகம் அறியாமையில் மூழ்கிக் கிடைக்கும் மக்க ளிடம் தழைக்காது! அணுவைப் பற்றியும் அணுக்கருவைப் பற்றியும் அறியாதவர்கள் கருவிழி, நீலவிழிக் குழந்தை களின் படிப்புக்கான பாரம்பரிய உண்மையை அறியாத வர்கள் இவர்களைப் போன்றோர்கள் இன்று அறியாமை யில் மூழ்கிக் கிடப்பவர்களாகக் கருதப்படுவார்கள்.

டாக்டர் 'புரோனோவஸ்கி' மனித வர்க்கத்தின் வாழ்க்கையில் இன்று உருவாகிவிட்ட புதிய சூழ்நிலையையும் புதிய கடமையையும் "பிரிட்டிஷ் மாணவ மாணவிகளுக்குத் தான் பேசினார்." என்றாலும் அந்தக் கருத்துரைகள் தமிழ் மாணவ மாணவிகள் உட்பட உலகம் முழுவதிலும் உள்ள மாணவிகளுக்கும் பொருந்தும் என்பதுதான் எனது உறுதியான முடிவாகும்.

இதையடுத்து பண்டிதநேரு 'இது' செயற்கைக் கிரகயுகம், என்று கூறிய கருத்தும், உலக சமய மாநாட்டில் நமது உதவி ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் "விஞ்ஞானத்தை ஆதார சுருதியாகக் கொள்ளாத எந்தச் சமயமும் இனி நிலைத்து நிற்க முடியாது" என்ற கருத்தும் எனது சிந்தனையில் பட்டுத் தெறித்தன.

சில நாட்களுக்கு முன்பு நமதுதலைநகரில் நடைபெற்ற இந்திய விஞ்ஞான காங்கிரஸின் துவக்க உரையில் இந்திய தலைமை அமைச்சர் "வேதகால ரிஷிகள் போன்றும், முனிபுங்கவர் போன்றும் விஞ்ஞானிகள் தங்களதுமனப்பாங்கையும் குறிக்கோளையும் அமைத்துக் கொள்ளவேண்டும்" என்று கூறிய அறிவுரை என் எண்ணத்தைத் தடவிற்று.

உடனேயே, சோவியத் யூனியன், சிறந்த தமிழனும் உலக புகழ் விஞ்ஞானப் பெருந்தகையுமான டாக்டர் சி.வி. ராமனுக்கு சமாதானப் பரிசு வழங்கி பெருமதிப்பு சூட்டிய நிகழ்ச்சி எனது நெஞ்சைக் கவ்விற்று விஞ்ஞானத்துறையில் இன்று உலகத் தலைமை வகிக்கும் சோவியத் யூனியன் எந்தத் திசைக்கு மாலையிட்டு வணங்குகிறது என்பதையும், அந்த மகத்தான பெரும் நாட்டின் அதிசயத்துரித முன்னேற்றம் பொது மக்களின் படைப்பாற்றலை கட்டவிழ்த்து விட்டு விஞ்ஞான அறிவை சமுதாய ரீதியில்புகட்டி தொழில் நிபுணர்களை, பொறியியல் வல்லவர்களை (இஞ்சினியர்களை) ஆசிரியர்களை, கலைஞர்களை, விஞ்ஞானிகளை இலட்சோப லட்சக் கணக்கில் படைத்திருப்பதில் அடங்கிக் கிடக்கிறது என்று அன்று இலக்கிய மாமேதை மாக்சிம்

கார்க்கி கூறினார் என்பதையும் எண்ணி எண்ணி அந்த எண்ணத்தில் என் சிந்தனை சுழன்றது.

"செய்பவெல்லாம் செய்தனன்" என்று சங்ககாலப் புலவன்' உலகத்தை இனிது துய்த்த ஒரு தனி மனித வாழ்வை சித்தரித்துக் காட்டினான். கவிச் சக்கரவர்த்தி யான கம்பனோ தனது லட்சிய உலகில் போகம் கனி யொன்று பழுத்ததைப் படம் தீட்டிக் காட்டினான்.விஞ்ஞா னப் பெரும் புலவன் புரோனோவிஸ்கி விஞ்ஞான கிளர்ச் சியும் ஜனநாயக உணர்ச்சியும் எவ்வாறு இணைபிரியா தவை என்பதை வளரும் உலகத்துக்கு எடுத்துக் காட்டி னார்.

நமக்கு தமிழ் இராச்சியம் மலர்ந்துவிட்டது. தமிழ் மொழி ஆட்சிமொழி என்று அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. பள்ளி இறுதி வகுப்பு வரையில் தமிழே போதனா மொழி யாகவும் நடப்புக்கு வந்துவிட்டது. தமிழகத்தில்ஜனநாயகம் தழைக்க அதற்கு இன்றியமையாத விஞ்ஞானக் கல்வியைப் பொதுமக்கள் வெகு விரைவாகப் பெற்றுத் துய்க்க கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாக தரம் உயர காலம்வந்து விட்டது; திட்ட வட்டமாக வந்து விட்டது.

இவ்வாறெல்லாம், சிந்தனை அலை மோதியடித்தது தொடர்ந்தாற்போல் 'வானம்' அளந்தனைத்து மறிந்து வண்மொழி வாழியவே என்றசென்ற தலைமுறையின் கவி பெருமானான பாரதியின் நன் நம்பிக்கைக் கருங்கற் பாறையில் 'தமிழில் விஞ்ஞானம் வளராது'' என்ற இன்றைய நல்லறிவாளர்களின் அவநம்பிக்கை அலைமோதி உடைபட்டுச் செல்லாக் காசாக மாள்வதை நினைந்தேன்.

உலகு புகழ் விஞ்ஞான அறிவாளியை தமிழன் பெற முடியும். ஆனால், கல்லூரியில் விஞ்ஞானத் தமிழோசை யைப் பெற முடியாது என்ற, உலகத்தில் ஒரு நாட்டாரும் ஒப்ப முடியாத ஜனநாயக, விரோதமான உளுத்து உதிர்கிற பிற்போக்கான சிற்சிலரின் அவலக் கூற்றையும் எண்ணி னேன்.

உடனே மனிதன் 186 மைல் உயரத்தில் ராக்கெட்டில் சென்று நின்றுகொண்டு விஞ்ஞானத்தின் வெற்றிக் கொடியை பிரபஞ்சம் வியக்க உயரத்தில் பிடிக்கிறான் என்று ஒரு எண்ணம். எதிரொலித்தது இறுமாப்பும் இரக்கமும் என் நெஞ்சில் மாறி மாறி விளையாடத் தொடங்கின.

ரஷ்யாவில் தேசிய வருமானத்தில் 2 சதவிகிதமும் ஆளுக்கு ஆண்டு தோறும் 150 ரூபாயும் விஞ்ஞானத்திற்கு செலவழிக்கப்படுகிறது. இங்கு தேசியவருமானத்தில்1600ல் ஒரு பங்கு ஆளுக்கு 15 நயா பைசாவும் செலவழிக்கப்படுகிறது. இந்நிலைமை மாறுமா? மாறும். அதோ—

"எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே"

என்ற பெருமுழங்கொலி தமிழ்ப் பெருமக்களிடையில் சமுதாய ரீதியாக வெடித்துக் கிளம்பி ஒலியும் எதிரொலியும் செய்யும் 'அண்மை—எதிர்காலம்' சிந்தையில் பளிச்சிட்டது

எக்களிப்போடு இன்பப் பொங்கல் நிகழ்ந்தது.

—'ஜனசக்தி' பொங்கல் மலர் 1958.

# சங்கரதாஸ் சுவாமிகள்

நாடக சபை உரிமையாளர்களில் ஒருவரான பழநியா பிள்ளை என்பவர் ஒருநாள் சுவாமிகளிடம் சென்றார். சென்று ''ஸ்வாமி! நமது ஷண்முகம் கதாநாயகனாக நடிக்கத்தக்க ஒரு நாடகம் எழுதுங்கள்'' என்று வேண்டினார்.

சுவாமி அன்று மாலை கடைத் தெருவுக்குச் சென்றார். பழைய புத்தகக் கடையொன்றில் அபிமன்யூ சுந்தரி அம்மானைப் பாடல் ஒரு பிரதி வாங்கினார். வீட்டுக்கு வந்தார். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு எழுதத் தொடங்கினார். ஒரு அரிக்கன் விளக்கை வைத்துக்கொண்டு எழுதினார். மறுநாள் பொழுது விடிந்து மற்றவர்கள் போய்ப் பார்த்தார்கள். சுவாமிகள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

போனவர்கள் பார்த்தது என்ன? சுவாமிகள் படுக்கையருகே 'வீர அபிமன்யூ' என்ற நாடகம், நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள்; அவற்றிற்கு ஏற்ற உரையாடல்கள்; 46 மணி நேரத்திற்குமேல் நடிக்கத் தகுந்த ஒரு நாடகத்தை ஸ்வாமிகள் இரவோடு இரவாக முடித்து விட்டார். இது பெரிய சாதனையல்லவா? சாதனைதான்.

ஆனால் இப்படி இரவோடிரவாக ஒரு புத்தகத்தை முடித்துக் கொடுக்கும் வல்லமை படைத்த எனது நண்பர் புதுமைப் பித்தனைப்போல் வேறு சிலரையும் எனக்குத் தெரியும். ஆயினும் சுவாமிகள் செய்தது என்ன?

அபிமன்யூ சுந்தரி அம்மானைப் பாடலை எடுத்தார். வீர அபிமன்யூ என்ற நாடகமாகத் தந்தார். நூறுக்கு மேல் பாடல்கள்—ஓர் இரவுக்குள்! கற்பனையோடு நாடக உரையாடல்கள் எழுதியிருந்தார். அம்மானைப்பாடல்

லுள்ள கருத்தோட்டம் வேறு; இந்த நாடகத்தில் காணக் கிடக்கும் கற்பனைகளும் கருத்துக்களும் வேறு.

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. அம்மானைப் பாடலை எடுத்து அபிமன்யூ நாடகமாக அருளியது முன்னேற்றமான செயல் தான் என்று சொல்வதற்குத் தயக்கம் வேண்டியதில்லை.

இனி சுவாமிகளுடைய நடிப்புத் திறனை கவனிப்போம். இதில்தான் சுவாமிகளுடைய உணர்ச்சி வேகத்தை—பாவனா சக்தியைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

எமன், இரணியன், சனீசுவர பகவான், காளபைரவர், கடோத்கஜன், முதலிய வேஷங்களில் நிகரற்ற விதமாக சுவாமிகள் நடித்திருக்கிறார்.

ஒருமுறை சுவாமிகள் சத்யவான்—சாவித்திரி நாடகத்தில் எமன் வேடம் தாங்கி நடித்தாராம். நடித்தபோது கையிலிருந்த சூலாயுதத்தை அதி ஆவேசத்தோடு ஓங்கித் தரையில் அடித்தாராம். உண்மையாகவே இதன் விளைவாக அவையிலிருந்த ஒரு தாய்க்கு "கருச் சிதைவு" ஏற்பட்டு விட்டதாம். அதிலிருந்து ஸ்வாமிகள் எமன் வேடம் பூண்டு வருகிறார் என்றால் அந்தக் காட்சி ஆரம்பிக்கு முன்பே, "சுவாமிகள் எமன் வேடத்தில் வரப்போகிறார். கர்ப்பிணிகளிருந்தால் சபையை விட்டு வெளியே போய்விடுங்கள். இந்தக் காட்சி முடிந்த பிறகு திரும்பி வாருங்கள்" என்று கேட்டுக் கொள்வார்களாம்.

இரணியனாக பிரகலாதன் நாடகத்தில் நடித்தபோது ஒரு தடவை பிரகலாதனாக நடித்த சிறுவனைத் தமது வலது கையால் தூக்கிக் கீழே எறிந்து கர்ஜித்தாராம். கூட்டத்திலிருந்த ஒரு அம்மையார் "ஐயோ பாவி குழந்தையைக் கொன்று போட்டானே" என்று அலறி மூர்ச்சை, போட்டு விழுந்து விட்டார்களாம்.

நளதமயந்தி நாடகத்தில் ஒருமுறை 'சனீசுவரன்' வேஷம் போட்டுவிட்டு நாடகம் முடிந்ததும் காலை சுமார் நாலு மணிக்கு கருக்கிருட்டில் தொலைவிலிருந்து ஒரு கிணற்றுக்குக் குளிக்கப் போனாராம்.

சுவாமிகள் ஆள் எடுப்பாயிருப்பார். உடம்பில் கறுப்பு வண்ணம் எண்ணெயும் தடவினால் பளபளப்பாக பயங்கரமாயிருக்கும் இந்தக் கோலத்தில் கருக்கிருட்டில் போனால் எவ்வளவு பயங்கரமாயிருக்கும் பாருங்கள்.

அன்று கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு எதிரே வந்த ஒரு பெண் சுவாமிகளை சனீசுவரனாகக் கண்டு பயந்து மாரடைப்பினால் அந்த இடத்திலேயே உயிர் விட்டாளாம்.

இந்த சம்பவங்களெல்லாம் சுவாமிகளின் உணர்ச்சி நடிப்பின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

சுவாமிகளின் ஆசிரியத் திறமையைப் புகழ்ந்து சொல்ல வேண்டிய தேவையே கிடையாது.

சுவாமிகள் காலத்திலும் அவருக்குப் பின்பும் தமிழ் நாட்டில் இன்றுவரை பேர் வாங்கிய, நடிப்பைத் தொழிலாகக் கொண்ட சிறந்த நடிகர்கள் எல்லோரும் சுவாமிகளின் மாணவர்கள். அல்லது மாணவர்களுக்கு மாணவர்களே ஆவார்கள்.

அவர்களிடம் பயின்ற, வயது வந்த நடிகர்கள் சுவாமிகள் சொல்லிக் கொடுத்தபடி பேசவும் நடிக்கவும் செய்யாமல் தங்கள் இஷ்டம்போல் பேசவும் நடிக்கவும் தொடங்கியதைக் கண்டார். மனம் உளைந்தார். ஆனவரைத் திருத்திப் பார்த்தார். திருத்தம் ஏற்படவில்லை. அவர்களை விட்டு நீங்கி பாலர் நாடக சபைகளை ஆரம்பித்து நடத்தினார். நடிப்புப் பயிற்சியில் சுவாமிகளுக்கிருந்த உயர்ந்த எண்ணத்தையும் சிறந்த பிடிவாதத்தை

யுமே காட்டுகிறது. ''ஒரு நாடகம் சிறப்பாக இருக்க வேண்டுமானால் அந்த நாடகத்தில் பங்கு கொள்ளும் நடிகர்களிடையே ஒழுங்கு நிலையும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். இதை ஸ்வாமிகள் கால முழுதும் வலியுறுத்தி வந்தார்'' என்று நண்பர் ஔவை சண்முகம் எடுத்துக் கூறும்பொழுது அந்த நாளில் முறையான நாடகத்திற்கு சுவாமிகள் ஆற்றிய அரும்பணி நமக்கு நன்கு புரிகிறது. எத்தனையோ பழக்க வழக்கங்களும், படியாமையும் நிறைந்திருந்த நடிகர்கள் மலிந்து நின்ற அந்தக் காலத்தில் சுவாமிகள் பிடிவாதமாக நடிகர்களைக் கட்டுப்படுத்தி முறையாக நாடகத்தை நடத்த முயன்றார் என்பதை எண்ணிப் பார்த்தால்தான் சுவாமிகளின் பெருமையும் தனிச் சிறப்பும் நமக்கு நன்றாகப் புரியும்.

கோவலன், வள்ளித் திருமணம், பவளக் கொடி, அல்லி அர்ஜுனா, சீமந்தினி, சதி அனுசூயா, மணிமேகலை, லவகுசா, சாவித்திரி, சதி சுலோசனா, பிரகலாதன், சிறுத்தொண்டர், பிரபு லிங்கலீலை, பார்வதி கல்யாணம், வீர அபிமன்யூ—இவை மாதிரி 40 நாடகங்களை சுவாமிகள் இயற்றி விட்டார் என்பதில் என்ன பெருமை இருக்கிறது? கோவலன், மணிமேகலை, போன்ற ஒன்றிரண்டு காப்பியக் கதைகளை விட்டால் வேறு அநேகமாய் புராண இதிகாச புளுகுணிக் கதைகள் தானே?

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் முற்போக்கு அம்சம் என்ன இருக்கிறது? ஏன் அன்னார் நினைவு விழா கொண்டாட வேண்டுமென்று சிலர் கேட்கிறார்கள்? இதே காரணம் கூறி, தமிழ் நாடக வளர்ச்சியில் அக்கரையுள்ள சிலரும் இந்த நினைவு விழாவில் பங்குகொள்ள மறுக்கிறார்கள் எனத் தெரிகிறது.

அத்தகைய அன்பர்களும் இந்த விழாவில் கலந்து கொள்ளவேண்டியது கடமை என்று கூறுகிறேன். ஏன்?

முதலில் உங்களிடம் ஒரு அடிப்படை உண்மையை எனது கோணத்திலிருந்து விளக்கிக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் அப்பொழுதுதான் தமிழ் நாடக வளர்ச்சியில் சுவாமிகளின் பங்கு பிற்போக்கா, முற்போக்கா என்பதை நாம் புரிந்து கொள்ள முடியுமென்று நான் கருதுகிறேன்.

சரித்திரத்தில் ஒரு வர்க்கம் முன்னேற்றமான செயல்களில் ஈடுபடுகிறது. அதே வர்க்கம் பிற்காலத்தில் பிற்போக்காகி விடுகிறது. இதை நாம் சமுதாய வரலாற்றின் நெடுகிலும் பார்க்கலாம்.

ஒரே வர்க்கம் தான். ஒரே மக்கள்தான். ஆயினும் முன்னேற்றப் பாதையில் செல்லும் காலத்தில் அவர்களிடம் வெளிப்படும் பண்பும் கருத்தும் வேறு. பிற்போக்கில் அழுந்தி விடுகிற பொழுது அவர்களிடம் உருவாகும் பண்பும் கருத்தும் வேறு.

முதலாளி வர்க்கம் அது முன்னேறிய காலத்தில் மிக மிக முற்போக்கான கருத்துக்களை வெளியிட்டது. பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் வெடித்தெழுந்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷங்கள் மிக முற்போக்கானவை அல்லவா? அதை முன்னின்று முழக்கியது முதலாளி வர்க்கம் தானே? ரூசோ, வால்டேர் போன்ற அறிஞர்களின் கருத்துக்கள் அன்று புரட்சிகரமான கருத்துக்கள் அல்லவா? அன்று நடுத்தர வர்க்கம் (பூர்ஷுவா) நிலப்பிரபுத்வ சமுதாயத்தை உடைத்துக் கொண்டு முதலாளித்துவ வர்க்கமாக உருவாகத் தொடங்கிய காலத்தில் அதன் பிரதிநிதிகளாக விளங்கியவர்கள் தானே? பிரெஞ்சுப் புரட்சியைப் பார்த்துத்தானே அமெரிக்கப் புரட்சி வெடித்தது.

இன்றைய நிலைமை என்ன? டிகாலே பிரெஞ்சு முதலாளிகளின் பிரதிநிதி. இன்று உளுத்துப்போன பிற்போக்கில் அழுந்திக் கிடக்கும் அமெரிக்க முதலாளித்துவத்தின் பிரதிநிதி ஐசன் ஹோவர். டிகாலேயும் ஐக்கும்

ரூசோவையும் வால்ட்டேரையும் பின்பற்றுகிறார்களா? இல்லை. ஆனால் இன்றைய பிற்போக்கு, சமுதாயத்தை மாற்றி புதிய முற்போக்கு சமுதாயத்தை உருவாக்க முன் வந்துள்ள பாட்டாளிகள், பொதுமக்கள் அன்றைய முன்னேற்றக் கருத்தை பயன்படுத்த எடுத்துக் கொள்கிறார்கள், இல்லையா?

ஆகவே என்றோ முன்னேற்றத் திசையில் சென்றவர்கள் வெளியிட்ட கருத்துக்களை இன்று முன்னேற்றத் திசையில் செல்கிறவர்கள் தான் அதிகமாகக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதுபோல் அன்றைய பிற்போக்காளர்களும் சரி இன்றைய பிற்போக்காளர்களும் சரி வெளியிடும் கருத்தின் அடிச்சுவடு ஒரு மாதிரித்தான் இருக்கிறது.

அன்று தெருக் கூத்திலிருந்து, முறை கெட்ட நாடகங்களிலிருந்து முறையான நாடகங்களுக்குத் தமிழகம் முன்னேற்றப் போராட்டம் தொடங்கிய காலக் கட்டத்தில் சுவாமிகள் புராணக் கதைகள் கற்பனைக் கதைகளை முறையான நாடகமாக்கி முறையாக நடிக்கச் செய்ததற்கும் இன்றைய புராண நடிகர்களுக்கும் பெருத்த வித்தியாசம் உண்டென்று நான் பார்க்கிறேன். சுவாமி காலத்தில் புராணக் கதையேனும் நாடகத்துறையில் முன்னேறியதைப் பார்க்கிறேன். இன்று புராணக் கதை நடிப்பவர்கள் பிற்போக்கில் அழுந்திக் கிடப்பதைப் பார்க்கிறேன்.

நான் கூறும் இந்த உண்மையைக் கலைஞர்களும் சுவைஞர்களான பொது மக்களும் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இரண்டாவதாக கருத்துக்கும் கலைக்கும் உள்ள உறவை கவனிக்க வேண்டும். கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டு மென்பவன் தான், நான் கலைக்காகக் கலை என்ற கொள்கையுடையவன் அல்ல நான். வாழ்வுக்காக கலை என்ற கொள்கையுடையவன் தான் நான்.

Form of a Content சொல்லும் பொருளும், உருவமும் உள்ளடக்கமும் பொருத்தமாக இருக்க வேண்டுமென்பதன்

கருத்து. கம்பன் கவிதையை இன்னும் எடுத்து வைத்து பாடிப்பாடிச் சுவைத்து தேன் குடித்த நரி மாதிரி சொக்கி நிற்கிறோம். கம்பன் நமக்கு 800 ஆண்டுகளுக்கு முந்தியவனே. அவன் வாழ்ந்த சமுதாயம் நமது காலத்தோடு ஒப்பு நோக்கும்பொழுது பிற்போக்கானதே. நமக்கு இன்று தெரிந்துள்ள எத்தனையோ உண்மைகளும் முற்போக்கான கருத்துக்களும் கம்பனுக்குத் தெரியாதவைகளே. ஆயினும் இன்றுவரை தமிழ் மக்கள், கம்பனைத் துய்த்தவர்கள் என்னசொல்லுகிறார்கள் தெரியுமா? 'கம்பநாடன் கவிதையைப்போல கற்றார்க்கு இதயம் கனியாதே." என்று சொல்லுகிறார்கள். இன்றைய நமது அரசாங்கக் கவிஞர் நாமக்கல்லார்.

'கம்பனை மறந்தால் தமிழேது
கவிதை என்பதும் கமழாது'

என்கிறார்.

கவிமணி தேசிய விநாயகனார்;

''பாவின் சுவைக் கடல் உண்டெழுந்து—கம்பன்
பாரில் மொழிந்த தீப்பாற் கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே.''

என்று தமிழ்ப் பெருமக்கள் எல்லோரையும் அழைக்கிறார்.

ஆகவே இன்றைய கருத்தையும் காலத்தையும் தாண்டி நம்மை வசீகரிக்கும் அம்சம் கம்பனிடம் என்ன இருக்கிறது? கவிதை அழகாகிய கலையழகு தானே! இந்தத் துறையில் சங்கரதாஸ் சுவாமிகளும் கருத்தை வைத்துப் பார்க்காமல் கலையை வைத்துப் பார்க்கும்படி தூண்டி ஏதாவது செய்திருக்கிறாரா? எண்ணிப் பாருங்கள்; செய்திருக்கிறார் என்பதே என் கருத்து.

நான் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவன் என்பது உங்களுக்குத் தெரியும். புரட்சிகரமான கருத்துக்கள் உடையவன் நான் என்பது உங்களுக்குத் தெரியும். சுவாமிகளின் கருத்துக்களுக்கும் எனது கருத்துக்களுக்கும் எத்தனையோ முரண்பாடுகள் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். எனினும் நாடகக் கலையில் அவர் ஆற்றிய பெரும் பணி என்னை அவரை வணங்கும்படி சொல்கிறது எனக் கூறவிரும்புகிறேன்.

இன்னும் கூறுகிறேன். கலையின் வளர்ச்சி Horizontal ஆகவும், Vertical ஆகவும் ஏற்படுகிறது. வேண்டுமென்றே பொருளைத் துல்லியப்படுத்திக் காட்ட ஆங்கிலச் சொற்களில் கூறுகிறேன். இனி இதை விளக்கிச் சொல்கிறேன்.

கலை சம மட்டமாக வளர்கிறது என்று நான் குறிப்பிடும்பொழுது, ஒவ்வொரு சமுதாய கால கட்டத்திலும், கலையின் தரம், திட்ட வட்டமாக வெவ்வேறு விதமாக உருவாகிறது என்று குறிப்பிடுகிறேன். அதாவது ஒவ்வொரு சகாப்தத்திலும் கலையின் உருவமும் உள்ளுரையும் தெளிவாக மாறுபாடு அடைந்து அந்தந்தக் கால முத்திரையுடன் வளர்ந்து முன்னேறி வருகிறது என்று நான் குறிப்பிடுகிறேன்.

நிலப்பிரபுத்துவ கலைக்கும் முதலாளித்துவக் கலைக்கும் சோஷலிசக் கலைக்கும் இடையில் திட்டவட்டமான வேறுபாடு காணமுடியும் அதோடு கலையின் உருவமும் உள்ளுரையும் காலத்திற்குக்காலம் முன்னேறி வருவதையும் பார்க்கமுடியும்.

ஆனால் இதுபோல் கலையின் செங்குத்தான வளர்ச்சியில் (Vertical) காலத்துக்குக்காலம் .வேறுபாடும் முன்னேற்றமும் தெரிய முடிவதில்லை. செங்குத்தான வளர்ச்சி என்று நான் குறிப்பிடும் பொழுது கலையின் ஆழம், செழுமை அழகு, அழகுணர்ச்சியின் நிறைவு ஆகியவைகளைக் குறிப்பிடுகிறேன். இந்தக் கலை அம்சங்களில் புதிய

காலக் கட்டம் பழையகாலக் கட்டத்தைவிட உயர்ந்து விளங்க வேண்டும் என்ற நியதி இல்லை.

சங்க காலத்தைவிட காப்பியக் காலத்திலும், காப்பியக் காலத்தைவிட தற்காலத்திலும் பொதுவாகக் கலை முன்னேறியிருக்கிறது. ஆனால் இளங்கோவைவிட, திருத்தக்கத் தேவரைவிட, கம்பனைவிட ஆழம், செழுமை, அழகு, அழகுணர்ச்சியின் நிறைவு ஆகிய அம்சங்களில் இன்று நாம் முன்னேறி இருக்கிறோம் என்று நாம் சொல்லி விட முடியுமா? முடியாது.

இந்த உண்மையை தமிழ் நாட்டுக் கலைஞர்களும் அறிஞர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்,

எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்திருந்தபோதிலும், நாடகப் பெரும் பேராசிரியர்களான ஷேக்ஸ்பியரையும், காளிதாசனையும், அயீஸ்கலீஸையும், இப்சனையும், மோலியரையும் இன்றும் ஏன் அகில உலகமும் உச்சி மேல் வைத்து மெச்சுகிறது? அவர்கள் வாழ்ந்த காலத்தின் பழமையையும். அவர்கள் கொண்ட சில பல கருத்துக்களின் பழமையையும் முக்கியப்படுத்தி அவர்களை ஏன் உதறியெறிந்து விட முடியவில்லை? இங்கே தான் கலையின் பெருமையை நான் பார்க்கிறேன்.

கலைக்கண் கொண்டு பாராமல் கலைஞர்களையும் கவிஞர்களையும் நம்மிடம் உருவாகியுள்ள சில எண்ணங்களையும், முடிவுகளையும் மாத்திரம் அளவு கோலாகக் கொண்டு அளந்துபார்த்து புறக்கணிக்க முற்படுவது சரியல்ல என்பது என் அபிப்பிராயம். கலையையும் கருத்தையையும் பொருத்திப் பார்க்க வேண்டும், காலத்தையும், வளர்ச்சியையும் பொருத்திப் பார்க்க வேண்டும், நான் அடிக்கடி சொல்வது போல் கருத்து—தங்கபஸ்பம், கலை—கொம்புத் தேன் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்

டும். அப்படிச் சிந்தித்தோமானால் இந்த நூற்றாண்டின் தொடக்கப் பகுதியைச் சேர்ந்தவர் சங்கரதாஸ் ஸ்வாமிகள் அவருடைய கதைக் கருக்கள் முற்போக்கான சமுதாய வாழ்வை எதிரொலிப்பதல்ல என்றெல்லாம் அப்பெரியரைக் குறை கூறி அவருக்கு செலுத்த வேண்டிய மரியாதையைச் செலுத்தத் தவறும் நிலைமை ஏற்படாது என்று கருதுகிறேன்.

மற்றொரு கருத்தையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

கருத்து மட்டும் கலை அல்ல. கருத்து புலனுணர்ச்சியோடும் (Sensation and emotion) இணைந்து நிற்க வேண்டும். அப்பொழுது தான் பண்படாது கிடைக்கும் ஒரு மனித அனுபவத்திற்குத் தகுதியான கலை உருவம் கொடுக்கும் திறமை ஏற்படும்.

கலாச்சாரத்தில் இதர அம்சங்கள் போல் அல்ல கலை. கலைக்குக் கண் கூடான அறிவு இன்றியமையாதது. அறிவு உணர்ச்சித் தரத்தைவிட, புலனுணர்ச்சித் தரத்தைவிட, புலனுணர்ச்சி உருவாகச் சித்திரம் (The stage of sensation and imagery) தாழ்ந்த நிலையில் இருக்கலாம். ஆனால் இதுவன்றிக் கலை இருக்க முடியாது. உதாரணமாக சொல்கிறேன். டால்ஸ்டாயின் சமுதாய வளர்ச்சிக் கருத்து தவறாக இருக்கலாம். ஆனால் ரஷ்யாவைப் பற்றிய அவருடைய கண்கூடான அறிவு (Perceptional Knowledge) மிக ஆழமும்சர்வாம்சமும்கொண்டது என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்தி மொழியில் நாவல் சாம்ராட்டாக விளங்கும் முன்ஷி பிரேம்சந்தின் கருத்துக்கள் முன்னுக்குப்பின் முரணாக இருக்கலாம். ஆனால் ஆழத்திலும் எல்லை வட்டத்திலும் அவருடைய நாவல்கள் தான் இந்தியாவில் இன்றுவரையும் நிகரற்று விளங்குகின்றன என்பது நல்லறிவாளர்கள் கண்ட முடிவு.

இவற்றையெல்லாம் ஏன் கூறுகிறேன் தெரியுமா? ஒரு கலைஞனை விமர்சிக்கும் பொழுது அவன் சிந்தனையை

கூட உதிர்த்த கருத்துக்களைவிட அவன் வெளியிடும் கண் கூடான அனுபவம் அவன் உணர்ச்சிக்கு அளிக்கும் உருவக விருந்து ஆகியவற்றில் தான் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

விஞ்ஞானத்தைவிட தத்துவ ஞானத்தைவிடக் கலை ஞானம் தான் சர்வரஞ்சகத் தன்மையுடையதாயிருக்கிறது. கற்றவர், கல்லாதவர், எல்லோருடைய நெஞ்சையும் அள்ளும் தன்மையுடையதாயிருக்கிறது.

இளங்கோ, கம்பன், காளிதாசன், ஆகியவர்களின் சமுதாயக் கருத்துக்கள் நமக்கு உடன்பாடு இல்லாதிருக்கலாம். ஆனால் இளங்கோவின் கண்ணகி, கம்பனின் சீதை, காளிதாசனின் சகுந்தலை என்ற அழியாத அமரச்சித்திரங்கள், நம்மை உணர்ச்சிக் கடலில் அமிழ்த்தி நமக்கு என்றென்றும் இன்பம் ஊட்டுபவைகளாக இருக்கின்றன.

இந்தச் சிந்தனை ஓட்டத்தோடு சங்கரதாஸ் ஸ்வாமிகளைப் பார்க்கிறேன். அவருக்கு விழாவெடுக்க வேண்டும் என்று எனக்குப் படுகிறது. கட்சி பேதம் பாராட்டாமல் சுவாமிகளைக் கொண்டாட தமிழ்ப் பெருமக்களை அழைக்கிறேன்.

—'ஜனசக்தி' 7-12-58
14-12-58
21-12-58

# கம்யூனிஸ்டுகளும் கலை இலக்கியமும்

அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்பதுபோலவே, கம்யூனிஸ்டுகளுக்கும் கலை இலக்கியத்திற்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் கேட்கிறார்கள்.

பாட்டுக்கெல்லாம் ஒரு பாட்டாக விளங்கும் 'கம்யூனிஸ்டு அறிக்கை'யைத் தயாரித்த மார்க்ஸும் ஏங்கல்சும் உலக இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவுத்திறன் பெற்றவர்களாக விளங்கினார்கள். ஷேக்ஸ்பியர், கத்தே, மில்டன், போன்ற இலக்கிய மேதைகளை நன்கு படித்திருந்தார்கள் என்பதை அவர்களது ஒவ்வொரு நூலிலும் காணலாம்.

கார்க்கியின் ரசிகமணி ரஷ்யப் புரட்சித் தலைவர் லெனின், புஷ்கின், செகாவ், டாஸ்டியோவ்ஸ்கி, டால்ஸ்டாய் ஆகியோரைப் புகழ்ந்து போற்றினார் லெனின்.

ஷேக்ஸ்பியர் பிறந்த நாடான இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியருக்குக் கிடைக்கும் வரவேற்பைவிட இன்று சோவியத் நாட்டில் அதிக வரவேற்புக் கிடைக்கிறது.

இதிலிருந்து தெரிவதென்ன? உலக இலக்கியத்தில் சிறந்தவைகளை எல்லாம் கம்யூனிஸ்டுகள் தம தாக்கி வளர்க்கிறார்கள். மார்க்ஸ் கூறினார், ''எனது அணுகும்முறை விமர்சன பூர்வமானது; புரட்சிகரமானது'' என்று தக்கனகொண்டு, தகாதன தவிர்ப்பது இலக்கியம்.

சிலருக்காக உள்ள இன்றைய சமுதாயத்தை பலருக்காகச் செய்வது—இதுதான் டால்ஸ்டாயிலும், பூஷ்கினிலும் ஷோலக்காவிலும் பரந்து காணக் கிடக்கும் பார்வை.

காலத்தால் பயன்படாதவை அழிந்து போகும். சிறந்த அம்சங்கள்—சமுதாயத்தை முன்னேற்றுவதில் துணை நிற்கும் அம்சங்கள்—நிலைத்து நிற்கும்.

சமுதாய வளர்ச்சிக்காக, மாற்றத்திற்காக, புரட்சிக் காக, பெருவாரியான மக்களின் முன்னேற்றத்திற்காக நிற்கும் கம்யூனிஸ்டுகளாகிய நாம் சமுதாயத்தை ஊக்கு விக்க சென்றகால இலக்கியத்தின் சிறந்த வாரிசுகளாக உள்ளோம்.

இன்று உலகிலுள்ள மிகச் சிறந்த உயர்ந்த கலை ஞர்கள் கம்யூனிஸ்டு இயக்கத்தின்பால் நிற்கிறார்கள்.

தலைசிறந்த உலகப் பாடகன் பால் ராப்சன் ஒரு கம்யூனிஸ்டு.

தலைசிறந்த ஓவியக் கலைஞன் பிக்காசோ ஒரு கம்யூனிஸ்டு.

தலைசிறந்த எழுத்தாளன் லூயி ஆர்கான் ஒரு கம்யூனிஸ்டு.

தலைசிறந்த உலகக் கவிஞர்கள் பாப்லோ நேருடா, நசீம்ஹிக்மத் கம்யூனிஸ்டுகள்.

தமிழ்நாட்டுக் கவிஞன் பாரதி 'பாரத சமுதாயம்' பாட்டில் முப்பது கோடி முழுமைக்கும் பொதுஉடைமை கோரினான். அவனது நுண்மாண் நுழை புலத்தால் பொதுவுடமைதான் சிறந்தது என்பதை உணர்ந்தான்.

கவி தாகூர் சோவியத் யூனியன் சென்று திரும்பிய பின், 'சோஷலிச சமுதாயம் உலகுக்கோர் வழிகாட்டி' எனப் போற்றினார்.

கம்யூனிஸ்டுகள் கலை இலக்கியத் துறையை அலட் சியப்படுத்தவில்லை. கேரளத்தில் கம்யூனிஸ்டு தலைவர்கள் தாமோதரன், இ. எம். எஸ்., தோப்பில் பாசி இலக் கியத் துறையில் முன் நிற்கிறார்கள். அதேபோல் ஆந்திரத் திலும்.

தமிழ் நாட்டில் கொஞ்சம் பலஹீனமாக இருந்த போதிலும் வெகு சிரத்தையுடன் பாடுபட்டு உறுதியுடன் முன்வந்து கொண்டிருக்கிறோம்.

## நமது குறிக்கோள்

கம்யூனிஸ்டு அறிக்கையில் பரம்பரையாக ஊறிப் போயுள்ள பழமை எண்ணங்களின் ஆணி வேரை அடியோடு தகர்த்தெறிவது நமது குறிக்கோள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (Radical rapture with traditional ideas) பரம்பரை பரம்பரையாக வந்திருக்கக்கூடிய சொத்துரிமை எண்ணம், உறவுகளைத் தகர்த்துக் கட்டுவதே நமது புரட்சியின் நோக்கம்.

நிலப் பிரபுத்துவத்தைப் பாதுகாக்கும் எண்ணங்களையே இறுதியாகப் பார்க்குமிடத்து குட்டி பூர்ஷுவா தத்துவங்கள் பிரதிபலிக்கின்றன. 'வாயில் சோஷலிசம், நடைமுறையில் அதற்கு எதிர்ப்பு.'

திருநாவுக்கரசரைச் சொல்லி சோஷலிசம் பேச முடியுமா?

கம்பனைச் சொல்லி சோஷலிசம் பேச முடியுமா?

வள்ளுவனைச் சொல்லி சோஷலிசம் பேசமுடியுமா? இப்போது அப்படிப் பேச முயற்சி செய்யப்படுகிறது.

கம்யூனிஸ்டுகள் சொல்லுவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

## கலையின் தளம்

சமுதாய வாழ்விலிருந்துதான் கருத்துக்கள் உருவாகின்றன. அந்தரத்திலிருந்து குதிப்பதல்ல அவை. அவைகளுக்கு ஒரு யதார்த்த தளமுண்டு. அதுதான் சமுதாய வாழ்வு.

பாரதியார் பாட்டில் பொதுவுடமையைப் பற்றிப் பேசுகிறார் .இந்த சம்பவம் எந்தச் சூழ்நிலையில் எந்தக் காலத்தில் நிகழுகிறது? குறிப்பிட்டதொரு சூழ்நிலை உருவானபின் தோன்றும் கருத்து இது.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகி யற்றி யான்.''

—இது திருக்குறள்

இத்தகைய கருத்துக்கள் அந்தக் காலத்தில் ஒலித்த சில கருத்துக்கள். ஆனால் இவை அந்தக் காலங்களில் ஆதிக்கம் வகித்தக் கருத்துக்களா? அல்ல.

''எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே
இல்லாருமில்லை உடையாருமில்லை மாதோ''

என்று கம்பன் பாடியதால் கம்பன் காலத்தில் சோஷலிசம் கம்யூனிசம் இருந்தது என்று அர்த்தமா? இல்லை. கம்யூனிசம், சோஷலிசம் சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றுபவை. இவைகளுக்கு ஒரு பிரத்யேக சூழ்நிலையும் கருத்தும் உண்டு. இன்றைய சமுதாய மாற்றத்தின் தேவையிலிருந்து எழும் கருத்துக்கள் இவை.

பண்பாட்டின் சாரம் கலை என்றான் கார்க்கி.

வாழ்க்கையின் பணிப்பெண் கலை என்றான் இக்பால்

சென்றகால வாழ்வின் கண்ணாடி சென்ற கால இலக்கியம்.

இக்கால வாழ்வின் கண்ணாடி இக்கால இலக்கியம்.

வருங்கால வாழ்வின் கண்ணாடி வருங்கால இலக்கியம்

இதுதான் இலக்கியத்தைப் பற்றி சரியான பார்வை.

## யார் கலைஞன்?

இனி கலைஞன் என்பவன் யார் என்பதைப் பார்ப்போம். உள்ளது உள்ளபடியே புகைப்படம் பிடிப்பவனல்ல கலைஞன். கலை என்பது புகைப் படமல்ல.

குயில் கூவிக்கொண்டிருப்பதை புகைப் படம் எடுப்பவன் அப்படியே எடுத்து விடுவான். ஆனால் ரவிவர்மா அந்தக் குயிலுக்குப் பின்னணியில் என்னவெல்லாம் வைப்பான் தெரியுமா? அவனது இன்பக் கற்பனையில்தோன்றும் அத்தனையையும் அதன் பின்னணியாக்குவான்! அதனால் தான் அவன் கலைஞனாகிறான்.

'ஆண்டவனே! நீ காட்டைப் படைத்தாய்! நான் பூங்காவைப் படைக்கிறேன்!'

'நீ மண்ணைப் படைத்தாய். நான் கண்ணாடியைப் படைக்கிறேன்!' என்றான் ஒரு கலைஞன்.

சிவாஜி கணேசன் பரதனாக நடிக்கிறார். அவர் அழுகிறார். அதைப் பார்த்து நாமும் அழுகிறோம். அவர் தான் கலைஞர்.

ஒரு கவிஞன் ஒரு பாட்டு எழுதினான்.

"பாக்கென்பது கமுகம் பழம்
பருப்பாவது துவரை
நாற்காதமும் முக்காதமும்
நடந்தால் எழுகாதம்
மேற்காவது கிழக்கே நின்று
பார்த்தாலது தெரியும்
ராக்க உண்மை சொல்வேன் எனை
ரட்சிப்பையோ பட்சிப்பையோ?

எதுகை மோனை, சீர் அடி, தளை எல்லாம் சரியாக இருக்கிறது. ஆனால் இது நம் உணர்ச்சியைத் தொடுகிறதா?

கம்பன் பாடுகிறான்.

வண்மையில்லை ஓர் வறுமை
　　இல்லையால்
திண்மை இல்லை நேர் செறுநர்
　　இன்மையால்,

உண்மை இல்லை பொய்
உரையாமையால்
ஒண்மை இல்லை பல கேள்வி
ஓங்கலால்".

சொற்களின் அமைதி கருத்தின் செழுமை ஒருங்கே அமைந்து நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிடு கிறது.

"வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்"

என்று தமிழ் நாட்டிற்கு இலக்கணம் கூறினார் பனம் பாரனார்.

இதே கருத்தைத்தான் பாரதி பாடுகிறான்.

"நீலத்திரை கடலோரத்தில் — நின்று
நித்தம் தவம்செய் குமரி எல்லை — வட
மாலவன் குன்றம் இவற்றிடையே
புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு"

இதைக் கேட்கவே மயிர் சிலிர்க்கிறது. இதுதான் கவிதை. எதுகை மோனை சரியாக இருந்தால் மட்டும் போதாது. உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ள வேண்டும்.

"சிங்களம் புட்பகம் சாவகம் மாகிய
தீவு பலவினுஞ் சென்றேறியும் — நின்று அங்கு
தங்கள் புலிக்கொடி மீன் கொடி
சால்புறக் கண்டவர் தாய் நாடு"

என்று பாரதி பாடும்போது நெஞ்சிலே மின்சாரத்தைப் பாய்ச்சுவது போன்றுள்ளது.

## வாழ்க்கையே கலையின் ஜீவன்

கவிதை எவ்வாறு பிறக்கும்? கோபுரத்தின் உச்சி யிலிருந்துகொண்டு பார்த்தால் உண்மைக் கவிதைக்

கலை பிறக்காது. புத்தகத்தில் படித்துவிட்டால் மட்டும் உண்மைக் கலை பிறந்துவிடாது. வாழ்க்கையிலிருந்து தான் உண்மைக் கலை பிறக்கிறது. புத்தகத்திலிருந்து தான் கவிதை பிறக்கிறது. என்றால் அக்கவிதை கம்பனோடேயே போயிருக்கும். வாழ்க்கையிலுள்ளது கவிதை. வற்றாத பொய்கை என்கிறது கம்பனின் கட்டி.

## நமது கடமைகள்

இறவாத புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.

தமிழ் வேதமெனப்படும் திருக்குறள் மட்டும் நம் கையில் இருந்தால் போதாது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் நம் கையில் இருந்தால் நாம் திருப்தியடைந்து விட முடியாது. இறவாத புகழுடைய புது நூற்கள் வேண்டும். இக்காலத்திய (Spirit of the Times) உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் புது நூற்கள் வேண்டும். இக்காலத்தில் நம்முடன் வாழும் சரித்திர புருஷர்களை, பாத்திரங்களாகச் சிருஷ்டிக்க வேண்டும். அவர்கள் யார்? பரமசிவனைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால் முன்னேற முடியாது. கோடானுகோடி சாதாரண மக்கள், தொழிலாளிகள், விவசாயிகள், படிப்பாளிகள், கலைஞர்கள் — இவர்களை, இவர்களது உள்ளத்தை, அபிலாசைகளை பிரதிப்பலிக்கும் பாத்திரங்களை இன்று நூற்களில் உருவாக்க வேண்டும்.

கம்பன் ஏன் இத்தனை காலம் நிலைத்து நிற்கிறான்? இனியும் ஏன் நிலைத்து நிற்பான்? குற்றாலக் குறவஞ்சி ஏன் நிலைத்து நிற்கிறது? காலத்தின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் வற்றாத குற்றால நீர் வீழ்ச்சிகள் அவை.

## கலை உருவம் முக்கியமானது

கலை இலக்கியத்தை வளர்க்க முனைந்த நாமனைவரும் கலையின் உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இலக்கியப் படையலுக்கு தனித் தன்மை உண்டு. சொல், வாக்கியம், உவமை கற்பனை ஆகியவை மிக முக்கியம். தமிழை எப்படி பயன்படுத்தி வந்தார்கள் என்பதை நாம் நம் மூதாதையர்களிடமிருந்து நன்கு கற்றுணர வேண்டும்.

பாரதியின் விழுந்த செழுமை இன்னும் தமிழ் இலக்கியத்தில் விழவில்லை. பாரதி திருவள்ளுவனையும் படித்தான், ஆனால் தன் காலத்துடனும் நின்றான்.

தமிழ் மகள் சொல்லிய சொல் அமுதமென்போம் என்றான். ஆனால் பாரதி வகுத்த ஆத்திச்சூடி தமிழ் மகள் (ஔவை) வகுத்ததிலிருந்து மாறுபட்டது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

என்பதை வள்ளுவனுக்கும், தமிழ் மகளுக்கும் பொருத்திப் பார்க்கும் திறத்துடன் வாழ்ந்தான் பாரதி.

### உதாரணங்கள்

கலையில், இலக்கியத்தில் உருவம் மிக மிக முக்கியமானது என்பதற்கு இரண்டொரு உதாரணங்கள்.

தாடகை வருகின்றாள்: கம்பன் சித்திரிக்கிறான்.

"இறக்கடை துடித்த புருவத்தள் எயிறு என்னும்
பிறைக் கடை பிறக்கிட மடித்த பிலவாயள்
மறக் கடை அரக்கி, வடவைக கனல் இரண்டு ஆய்
நிறைக் கடல் முளைத்தென நெருப்பு எழ விழிந்தாள்"

அழகிய உருவான சூர்ப்பனகை வருகிறாள். கம்பன் கவியின் நயத்தைப் பாருங்கள்.

தெரியுமா? திரு. தமிழர்களுக்கு, தன்னுணர்வை—தமிழன் என்ற உணர்வைத் தூண்டி வளர்த்த, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் முன்னோடிகளாயிருந்த சிலரில் கவிமணியும் ஒருவர். பிற்காலத்தில் ஆணித்தரமான கருத்துக்களாலும் அளவற்ற ஆவல் துடிப்போடும் ஐக்கிய தமிழகக் கொடியை உயர்த்திப் பிடித்தவர் அவர் மகாநாட்டுச் சொற்பொழிவு வாழ்த்துச் செய்திகள், வானொலிப் பேச்சு, பத்திரிக்கை நிருபர்களுக்கு பேட்டிகள், —ஆகியவை மூலம். திரு. தமிழக விடுதலையின் இன்றியமையாத தேவையையும், ஐக்கிய தமிழக அமைப்பின் அவசர அவசியத்தையும், மொழிவழி ராஜ்யங்கள் உடனடி அமைய வேண்டுமென்ற கோரிக்கையின் ஜனநாயக நீதியையும் ஆணித்தரமான கருத்துவன்மையோடு அனுபவமிக்க ஆதாரங்களுடன் விளங்கியுள்ளார்.

திரு. தமிழர் நடத்திய விடுதலைப் போராட்டத்தை அவர் வரவேற்ற பெருமிதமும், பட்டம்தாணுவின் பி.சோ. பேயாட்சி தமிழர்களின் குருதி குடித்து உயிரைச் சூறையாடி துப்பாக்கி முனையில் கர்வகங்கார தர்பார் நடத்தியதைக் கண்டித்த கண்டனக் குரலின் கம்பீரமும், மற்றவர் மௌனிகளாயிருந்த காலத்தில் தம் உடம்போடு உயிர்மல்லாடி படுக்கையில் கிடந்த காலத்தும் மார்த்தாண்டம், புதுக்கடை துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்த வன்மையும், மொழிவழி ராஜ்யப் பிரச்சினையில் காங்கிரஸ் சர்க்காரை இடித்துக் கூறிய நெஞ்சுரமும், தமிழகத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் விடுத்த உருக்கமான வேண்டுகோளும், தமிழும் தமிழனும் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

கவிமணி தனக்கென்று வாழவில்லை, தமிழுக்கும். தமிழகத்திற்கும் அதன் மூலம் உலகத்திற்குமாகவே வாழ்ந்தார். அவருடைய லட்சிய கீதம் திருவிதாங்கூர் தமிழக விடுதலையும், ஐக்கிய தமிழக அமைப்பும்தான். அவருக்கு ஏதேனும், மனக்குறை இருந்தால், திரு.

# கவிமணிக்கு அஞ்சலி

கவிமணி மறைந்துவிட்டார்! கவிமணியின் மறைவுச் செய்தி தமிழுணர்வும் தமிழ்ப் பண்பாட்டுணர்ச்சியுமுள்ள மக்களையெல்லாம் மெய்யாகவே சோகக் கடலில் 'ஆழ்த்திற்று'.

நாம் துக்கத்தில் ஆழ்கிறோம். ஈடுகெட்டமுடியாத நஷ்டத்தை உணர்கிறோம். ஏன்?

அவர், 1954 வரையில் வாழ்ந்த, வாழ்கிற, தமிழ்க் கவிஞர்களில் முதல்தரமானவர்களிலும் முதிர்ந்து கனிந்த கவிஞர். பண்பட்ட தமிழ்ப் பேரறிஞர். பாரதிக்குப் பின் மறுமலர்ச்சிக் கவிஞர்களில் தலைசிறந்தவராய் விளங்கியவர். ஔவையின் சொற் செட்டோடு, தமிழ் மொழியில் குழந்தைகளுக்கான இன்கவிகளும் அரும் பாடல்களும் பாடியவர்களில் இவருக்கு நிகர் இவரே. தமிழர்களுக்கிடையில் சாதிமத கட்சிக் குரோதமின்றி யாவரையும் நேசித்த, யாவராலும் நேசிக்கப்பட்ட தமிழ்ப் பெரியார் திரு.வி.க. என்றால் தமிழ்ப் பெருங்கவி நமது கவிமணி ஆகும். அவர் திருவிதாங்கூர் தமிழர்களுக்கு இணையற்ற வழிகாட்டியாகவும் தலைவராகவும் விளங்கியவர். நாஞ்சில் நாட்டுத் தமிழர்களில் மிக்காருக்கும், சகலவிதங்களிலும் இவர்தான் 'சுப்ரீம் கோர்ட்' தமிழகம் எங்கணுமிருந்து அவரைக் காண வந்த எத்திறத்தாருக்கும் திருப்திகரமாக, இனிமையான தமிழ் நல்விருந்தளித்து வந்த வள்ளல் அவர்.

## மரணப் படுக்கையிலும் ஐக்கியத் தமிழகமே சிந்தனை

படுக்கையிலிருந்துகொண்டே ஐக்கியத் தமிழகப் போராட்டத்தை—திருவிதாங்கூர் தமிழகப் போராட்டதை கவிமணி எவ்வளவு உயிர் கொடுத்து வளர்த்தார்

தெரியுமா? திரு. தமிழர்களுக்கு, தன்னுணர்வை—தமிழன் என்ற உணர்வைத் தூண்டி வளர்த்த, இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் முன்னோடிகளாயிருந்த சிலரில் கவிமணியும் ஒருவர். பிற்காலத்தில் ஆணித்தரமான கருத்துக்களாலும் அளவற்ற ஆவல் துடிப்போடும் ஐக்கிய தமிழகக் கொடியை உயர்த்திப் பிடித்தவர் அவர் மகா நாட்டுச் சொற்பொழிவு வாழ்த்துச் செய்திகள், வானொலிப் பேச்சு, பத்திரிக்கை நிருபர்களுக்கு பேட்டிகள், —ஆகியவை மூலம். திரு. தமிழக விடுதலையின் இன்றியமையாத தேவையையும், ஐக்கிய தமிழக அமைப்பின் அவசர அவசியத்தையும், மொழிவழி ராஜ்யங்கள் உடனடி அமைய வேண்டுமென்ற கோரிக்கையின் ஜனநாயக நீதியையும் ஆணித்தரமான கருத்துவன்மையோடு அனுபவமிக்க ஆதாரங்களுடன் விளங்கியுள்ளார்.

திரு. தமிழர் நடத்திய விடுதலைப் போராட்டத்தை அவர் வரவேற்ற பெருமிதமும், பட்டம்தாணுவின் பி.சோ. பேயாட்சி தமிழர்களின் குருதி குடித்து உயிரைச் சூறையாடி துப்பாக்கி முனையில் கர்வகங்கார தர்பார் நடத்தியதைக் கண்டித்த கண்டனக் குரலின் கம்பீரமும், மற்றவர் மௌனிகளாயிருந்த காலத்தில் தம் உடம்போடு உயிர்மல்லாடி படுக்கையில் கிடந்த காலத்தும் மார்த்தாண்டம், புதுக்கடை துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டித்த வன்மையும், மொழிவழி ராஜ்யப் பிரச்சினையில் காங்கிரஸ் சர்க்காரை இடித்துக் கூறிய நெஞ்சுரமும், தமிழகத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் விடுத்த உருக்கமான வேண்டுகோளும், தமிழும் தமிழனும் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

கவிமணி தனக்கென்று வாழவில்லை, தமிழுக்கும். தமிழகத்திற்கும் அதன் மூலம் உலகத்திற்குமாகவே வாழ்ந்தார். அவருடைய லட்சிய கீதம் திருவிதாங்கூர் தமிழக விடுதலையும், ஐக்கிய தமிழக அமைப்பும்தான். அவருக்கு ஏதேனும், மனக்குறை இருந்தால், திரு.

திரு. தமிழக விடுதலையைக் கண்ணாரக் காணுமுன், உடம்பை விட்டு உயிர் பிரிந்ததுதான். இலட்சியம் ஈடேறும் என்ற தன்னம்பிக்கையை ஆகஸ்ட் 17ம் தேதி திரு தமிழகம் கண்ட மக்கள் எழுச்சி அவருக்கு ஊட்டியிருக்குமென்பதில் ஐயமில்லை.

## பாரதியாரும் கவிமணியும்

பாரதியாருக்கு முன்பே தோன்றியவர்; எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு மறைந்தவர் கவிமணி. ஆயினும் பாரதியார் பாடல்களிலுள்ள தேசபக்தி வேகம், சுதந்திர வேகம் இவருடைய பாடல்களில் காண முடியாது. ஏனென்றால் இவருடைய வாழ்க்கை சூழ்நிலை வேறு. அவருடைய சூழ்நிலை வேறு;

"மன்னரையும், மெய்ஞான மதக் குரவர் தங்களையும் மதிக்கலாகேன்" என்றான் பாரதி. ஆனால் கவிமணியோ, ராஜபக்தி உடையவராக இருந்தார் என்பதை நான் நேரில் அறிவேன். இவர் திருவிதாங்கூர் மன்னராட்சியில் அமைதியான சூழ்நிலையில் பெரும் தாரம் உருவாகியவர்.

பாரதியார் பாடல்கள் மகா ஆலவிருட்சத்தை வேரோடு பிடுங்கியெறியும் வேகங்கொண்ட பாடல்கள். தே. வி. யின். பாடல்கள் நேர்மாறானவை. அமைதிமிக்க பாடல்கள் பவழமல்லிகைப் பூவை உதிர்க்கவல்ல தென்றற் போன்ற பாடல்கள். ஒரு இளம் புலவர்;

> "புத்தேரிக் கவிமணியே பொதிகை மலைத்
> தென் றெலைப் புகழ் பெற்றாயே!"

என்று பாடியது பொருந்தும். பழைய செம்மை சான்ற இலக்கியங்களில் கவிமணி பெரிதும் ஈடுபாடு உடையவர். பாரதி பரம்பரையில் கவிமணியும் தலைசிறந்த கவிஞர். பாரதி, வள்ளுவனை, இளங்கோவை, கம்பனை,

ஔவையை உச்சிமேல் வைத்து மெச்சுகிறான். கவிமணி அமெரிக்கப் புதுமைக் கவிஞனான வால்ட்விட்மனிடமும் மிக ஈடுபாடுடையவர். வால்ட்விட்மன், ஷேக்ஸ்பியர், மில்டன் ஆகிய மகா கவிகளை சொற் செட்டோடு அருமையாகப் புகழ்கிறார். கவிமணியும் பாரதி வழியில் இந்தப் புதுமை வழியைத் தழுவுவதைப் பாருங்கள்.

வள்ளுவன் தந்த திருமறையை "தமிழ் மாதின் உயிர் நிலை" என்கிறார்.

சேரன் தம்பி தந்த சிலம்புச் செல்வத்தை, "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதரும் சிலப்பதிகாரம்" என்கிறார்.

கம்பராமாயணத்தைக் குறித்தோ;

"பாவின் சுவைக் கடல் உண்டெழுந்து—கம்பன்
டாரிற் டோழிற்த திப்டாற்சடல்"

என்று மெய்சிலிர்க்க வியந்தோதுகிறார்.

ஔவையைப்பற்றி பாரதி சொல்லும் பொழுது,

"தமிழ் மகள் சொல்லிய சொல்
அமிழ்தமென்போம்"

என்று கூறினான். இவர் சொல்வதைக் கேளுங்கள்!

"ஔவைக் கிழவி நம் கிழவி
அமுதின் இனிய சொற் கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங் கிழவி"

என்று கூறுகிறார்.

தற்காலத்துப் பாரதியைப் பற்றி, தனக்கு நேர் அனுபவமுள்ள பாரதியின் பாடல்களைப்பற்றி சாதாரண மனிதனைப் பார்த்து கூறுகிறார்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!" என்று ஆம்! அவனுக்கு 'பாரதியே போதுமென்கிறார் அதை விளக்குவதைப் பாருங்கள்.

“உள்ளந் தெளியுமொரு பாட்டிலேயடா! மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா!
கள்ளின் வெறி கொள்ளுமோர் பாட்டிலேயடா
ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்துவிடுமோர் பாட்டிலேயடா”

எளிய, இனிய, கருத்தேறிய பாடல்கள் பல அவர் தமிழுக்குத் தந்துள்ளார். தமிழன்னைக்கு அவருடைய காணிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை பின்வருவன.

“மலரும் மாலையும்” என்ற தொகுதி தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டுமென்பர். சின்னஞ்சிறார்க்கு அவர் பாடியருளிய கவியமுதம் இணையற்றது. அவர்கள் அபி நயத்தோடு ஆடிப்பாடுவதற்கு ஏற்ற பாடல்கள். இவை தமிழகத்திலுள்ள பாடசாலைகளிலெல்லாம், பாடுவதற்குக் கட்டாய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கவை சுப்பிர மணியம் கூறியிருப்பது எல்லோராலும் வரவேற்கத் தக்கது.

“மலரும் மாலையும்” என்ற இந்தக் கவிதைத் தொகு தியை “செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு இந்த நூல் உரியதாய் என்றும் வாழ்கவே” என்று ஆசிரியர் உரிமை செய்துள்ளது சிந்திக்கத் தக்கது. இதைப் பாட புத்தகமாக்கலாமே!

“ஆசிய ஜோதி” எட்வின் அர்னால்டு என்ற ஆங்கில ஆசிரியர் எழுதிய, (Light of Asia) என்ற நூலின் தமி ழாக்கம். ‘‘ஈயடிச்சான் காப்பி’ மொழி பெயர்ப்பல்ல. அந்த நூலின் கருத்தை எடுத்து, அதற்கு தமிழ் உடம்பும் உயிரும் ஒளியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கவிமணி யின் கவித்திறன் மட்டுமல்ல; முதிர்ந்த தமிழ் பண்பாட்டு உணர்ச்சியையும் பார்க்கலாம் “இப்பாடல்கள் தமிழ் இலக் கியத்தில் ஈடும் எடுப்புமின்றித் தலைசிறந்து விளங்கு கின்றன.” என்று பேரறிஞர் திரு. வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்.

''உமர் கய்யாமும்'' அப்படித்தான்.மொழி பெயர்ப்பை மூல நூலாக்கவல்ல தே. வி. யின் திறன் இதிலும் ஒளி விடுகிறது.

''வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றல் காற்றுண்டு;
கையில் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மது உண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு;
தெரிந்து பாட நீயுண்டு;
வையம் தரும் இவ்வன மன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?
எத்துணை அருமருந்தன்ன தமிழாக்கம்!

''நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் இது. சமுதாயச் சீர்திருத்த நன்னோக்கம் கொண்ட நூல். தற் காலத் தமிழில்ஒரு சிறந்த கிண்டல் காவியம். கவிமணி தமிழ்த்தாய்க்கு காணிக்கை செலுத்திய ஒரு நூதன இலக் கியம் இது. திரு. தமிழகத்தில் நாஞ்சில் நாட்டு வேளாளர் சமுதாய ஒழுக்கம் திருந்துவதற்கு பெருந்துணை நின்ற நூல்.

கவிமணியின் பாடல்களின் சிறப்பு, அவை தமிழ் பண் பாட்டுணர்ச்சிப் பெருநலம் மிகுந்து நிகழ்வதுதான்.

பிற்காலத்தில் அன்பர்களின் வற்புறுத்தலால் ''தேசக் கொடி''; ''காங்கிரஸ் கதர்'' ''ஒற்றுமையின் உயர்நிலை'' ''நாட்டுக்கே உழைப்போம்'' முதலிய துண்டுப் பாடல் களை அவ்வப்போது பாடியிருக்கிறார். தீண்டாமை ஒழிய உணர்ச்சி ததும்பி பாடியிருக்கிறார். பெண்ணுரிமை பெண் விடுதலைக் கவிதைகளும் பாடல்களும் பலப்பல அழகாகப் பாடியிருக்கிறார். பாரதி,

''இல்லையென்ற சொல்லை—உலகின்
இல்லையாக வைப்பேன்''

என்று முழங்கினான்.

பாரதி பரம்பரையில் வந்த கவிமணி "ஏழையென் றொருவன்—உலகில் இருக்கலாகாதய்யா" என்று அமைதி யாக உருக்கமாகப் பாடுகிறார்.

கிரேக்க இலக்கியங்கள் மாதிரி மக்களது இகவாழ்விற்கு உதவி அவர்களுடைய நலத்தைப் பேணும் நூல்கள் நமது பண்டை இலக்கியங்கள், இவற்றை நன்கு பயின்றவர் தே. வி. வேதாந்த சூத்திரத்திற்கு உரை செய்த ஆதி சங்கரரும் நிலையாமையை ஒரு புறம் உணர்த்தி, வியாவ காரிகதசையில் (நடை முறையில்) உலக வாழ்வை வற் புறுத்திக் கூறுகிறார். இந்தப் பாட்டின் அடிநிலைக் கொள்கை தே. வி. க்கு உடன்பாடு எனத் தெரிகிறது. மற்றொரு பக்கம் பண்டைய இலக்கியப் பயிற்சியால் மனிதத்துவம் (Humanism) முனைந்து நிற்கிறது.

## சோவியத் நண்பர்

இவற்றின் விரவலாக உமர்கய்யாம் பாடல்களில் ஈடு பாடும் அருமையான தமிழாக்கமும் நிகழ்கின்றன. இங்கே அவர் உள்ளத்தின் அடித்தளத்தில் தோய்ந்த கருத்து தமிழின் நறுமணம் வீசிவருவதை நோக்குங்கள்.

"... ... ... ... ...
வாழும் வாழ்வில் உன்னையும் நீ
மறந்து வாழ வேண்டுமடா!
தோழனாகி யாவர்க்கும்
தொண்டனாக வேண்டுமடா!

இறுதிக் காலத்தில் சில ஆண்டுகள், சோவியத் யூனி யனின் உறுதியான நண்பராக விளங்கினார். இந்தக் கலைஞர். என்னிடம் நேரில் ஒரு தடவை 'ஒவ்வொரு கவியும் பொதுவுடைமை வாதியாகத்தான் இருக்க முடியும்'' என்று மிக உற்சாகத்தோடு கூறினார்.

இறுதியாக, கவிமணியின் தமிழைக் குறித்து பேராசிரி யர் வையாபுரிப் பிள்ளை கூறும் சில வார்த்தைகளைக் கூறுகிறேன்!

"இவருடைய தமிழ் என்றும் மனத்தில் போற்றி வைக்கத் தகும் பொற்களஞ்சியமாக உள்ளது. நல்ல தமிழ்; நமது மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ்: உண்மை நிரம்பிய தமிழ்; கற்றோர்க்கும், கல்லார்க்கும் நகரத்தினருக்கும் நாட்டுப்புறத்தினருக்கும் ஒன்றுபோலவே இனிக்கும் தமிழ் இவ்வியல்புடைய தமிழ் இப்பொழுது நமது நாட்டில் அரிதாய்ப் போய்விட்டது. இழக்கமுடியாத இவ்வரிய செல்வத்தைப் பல ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நமக்குப் போற்றி அளித்தவர் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை..."

அமர்ந்த இனிய, மனோரம்மியமான தமிழ் மணம் வேண்டுமாயின், கவிமணியின் பாடல்களை இனிது நுகரலாம். வருங்காலத்துக்குரிய தமிழ் வேண்டுமாயின் இவற்றையே பல முறை கற்க வேண்டும்.

கவிமணி வாழ்க!
கவின் தமிழ் வாழ்க!

-'ஜனசக்தி' 3-10-1954

# ரகுநாதன் கவிதைகள்

வால்ட்விட்மன் அமெரிக்காவில் மட்டுமல்ல, இங்கிலாந்திலும், பிரான்சிலும், ஜெர்மனியிலும் ஏனையநாடுகளிலும் ஜனநாய சகாப்தத்தின் தீர்க்கதரிசி என்று கொண்டாடப் படுகிறார். இவர் உலகு புகழ் புரட்சிக் கவிஞர்.

விட்மனுடைய கண்ணோட்டத்தில் கவிதையின் கடமை மனித வர்க்கத்தை இன்பக் கடலாட்டுவது மட்டுமல்ல. ஒளி காட்டி வழி காட்டுவதுமாகும்.

விட்மனே சொல்கிறார்:

பண்டைய, இன்றையக் கலைஞர்கள், கவிஞர்களான கிரேக்க அழகுக் கலைஞர்கள், ஷேக்ஸ்பியர், டென்னிஸன், விக்டர்ஹ்யூகோ, கார்லைல் எமர்சன் ஆகியவர்களைச் சுவைத்துச் சுவைத்துக் கற்றேன். அப்பால் எனது கருத்தென்ன தெரியுமோ? கவிதைகளோ அல்லது ஏனைய எழுத்துக்களோ வாசகர்களுக்கு ஆற்றும் சாலச்சிறந்த பணி அவர்களுடைய அறிவு உணர்ச்சியைத் திருப்திப்படுத்துவதோ அல்லது சுவை நிறைந்த சில பொருள்களை அள்ளி வழங்குவதோ அல்லது மகத்தான உணர்ச்சி சித்திரங்களையோ குண ஓவியங்களையோ சம்பவக் காட்சிகளையோ தீட்டுவதோ அல்ல; மாறாக துறுதுறுத்த தூய்மையான மனிதத்தன்மையையும் அற உணர்ச்சியையும் தீவிர உடமையாகவும் ஒழுக்கமாகவும் சிறந்த உள்ளத்தையும் புகட்டுவதாகும்

இவ்வாறு ஆணித்தரமாகக் கூறும் விட்மன், ஜனநாயகத் தேவையைப் பற்றி கூறும்பொழுது, விட்மன் கூறும் ஒரு கருத்தோவியமும் இங்கு கவனிக்கத்தக்கது.

''அமெரிக்காவில் இன்றைய அடிப்படையான தேவை, இன்றைய அடிப்படைச் சூழ்நிலையையும் இதை ஒட்டிய

எதிர் காலத்தையும் சார்ந்த ஆதாரத்தேவை, ஒரு கூட்டம் சுத்த சுதேச ஆசிரியர்கள் இலக்கியக் கலைஞர்களே. இவர்கள் ஏற்கெனவே உள்ளவர்களுக்குப் பெரிதும் மாறு பட்டவர்கள்; தரம் உயர்ந்தவர்கள்; இதுவரைகண்டறியாத விதத்தில் புனிதமும் புதுமையும் காலத்திற்கும் நாட்டுக்கும் ஏற்ற தகுதியும் உடையவர்கள், அமெரிக்க மனப்பான்மை சுவை, நம்பிக்கை ஆகியவற்றின் கூட்டு மயமாகி, அதில் புத்துயிர் பெற்று, சமுதாயத்தையும் அரசியலையும் ஆணி வேர் வரையில் புதுமை செய்து நாட்டின் உற்பத்தி அறிவியல் ஆகியவற்றின் அடிப்படைகளில் அறவுணர்ச்சி யையும் ஒழுக்கச் சீலத்தையும் நிலையாகத் தெளிவாக நிலைநாட்டி, புதிய இனத்தை உருவாக்குகிறார்கள்.

ஜனநாயகத்தின் தீர்க்கதரிசியான விட்மன் விரும்பி வேண்டும் ஜனநாயகத் தேவை, இன்றைய தமிழகத்தின் ஜனநாயகத்திற்கும் மிகமிகத் தேவை என்பதை கவனத் தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயகப் பண்பு வாய்ந்த கவிஞரும் கலைஞருமே இன்று தமிழகத்திற்கு இன்றியமையாதத் தேவை என்பதையும் கருத்தூன்ற வேண்டும்.

ஜார்ஜ் பிளக்கனோவ் என்ற பிறிதொரு பெரியார் (இவர் ரஷ்யர்) சமுதாய கண்ணோடு கலையைப் பற்றிய சரித்திர பூர்வமான விளக்கம் கொடுக்கிறார். அழகுக் கலைக்கும். சுயநலத்திற்கும் ஒட்டுமில்லை உறவுமில்லை என்கிறார்.

''பண்டைய ஒழுக்கச் சீலத்தின் அடிப்படையான சமுதாய நல நாட்டமே தன்னலமற்ற மறுப்புணர்ச்சியை ஊக்குவிக்கிறது.'' என்று அறிவுறுத்துகிறார். மேலும் பிளக்கனோவ். ''தகுதியும் திறனும் உடைய கலைஞன் தற்காலத்தில் வெற்றி சூடி நிற்கும் மகத்தான விடுதலைக் கருத்தோட்டங்களைச் சார்ந்து நின்று தனது படையலின் அளவைக் கணிசமான அளவு உயர்த்த வேண்டும்'' என்றும் கூறுகிறார்.

ஜனநாயகப் பாதையில் உருவாகி வரும் புதிய தமிழகத்திற்குச் சிறந்த கலை இலக்கிய விமர்சனப் புலவரான பிளக்கனோவின் அறிவுரைகள் பொருந்தும் என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது தமிழர்க் கட்டுப்பாடு.

இனி உலக மகாகவிகளுள் ஒருவரும் நவ இந்தியாவின் குருதேவருமான இரவீந்திரநாத் தாகூரின் ஆணி முத்தன்ன ஒரு அறிவுரையைக் கவனிக்க வேண்டும்.

''நாகரிகத்தை மதிப்பிட அது பிறப்பித்திருக்கும் பூதாகரமான யந்திரங்களையும் அதன் ராட்சசகரமான ஆற்றல்களையும் அளவிடக் கூடாது. மனிதவர்க்கத்தின் பால் உள்ள பேரன்போடு எத்தனை விதிகளையும் அமைப்புகளையும் பிறப்பித்து, வளர்ந்து வெளியிட்டிருக்கிறது. என்று கணக்கிட வேண்டும்.''

இந்த அறிவுரையோடு.

நரமாமிசப் பட்சணித்தனத்தால்-மனிதனை மனிதன் ஒடுக்கி, நசுக்கிக் கொன்று குவித்து அழிக்கும் குரூரத்தனத்தால்-நாகரிகம் நிலைத்து நில்லாது. மனிதன் அன்பையும் நீதியையும் உறுதியாகக் கடைப்பிடிப்பதாலேயே நாகரிகம் செழித்துச் சிறக்கும்'' என்ற அப் பெரியாரின் கருத்துரையையும் இணைத்து மென்று மென்று சிந்தித்து ஜீரணிக்க வேண்டும்.

அப்பால் இன்றைய தமிழ்க் கவிஞர்களின் தனிப் பெருங் குருநாதனான பாரதியின்,

''தெள்ளுற்ற தமிழமுதின்
சுவை கண்டார் இங்
கமரர் சிறப்புக் கண்டார்''

என்ற அடியிலும்,

''நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக் குழைத்தல்
இளமைப் பொழுதும் சோராதிருத்தல்''

என்ற அடியிலும் காணக் கிடக்கும் பொருள் செறிந்த கருத்துக்களை உன்னி உன்னி ஓர வேண்டும்.

அத்தோடு,

''உள்ளத்துள்ளது கவிதை-இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்-உண்மை
தெரிந்துரைப்பது கவிதை''

என்ற கவிமணியின் கவிமணியும் கருதத் தக்கது.

விட்மன், பிளக்கனோவ், தாகூர், பாரதி, கவிமணி ஆகிய கவிஞர் பெருமக்களின், விமர்சனப் புலவர்களின் மேற்கூறிய கருத்துக்களை ஒருசேர வைத்துக் கொண்டு இந்த நூலை ''ரகுநாதன் கவிதை''களை - எடை போட்டுப் பார்க்க வேண்டும்.

கவிதைச் செல்வத்தில் தமிழன்னைக்கு ஒப்பாரும் மிக்காரும் உலகில் இல்லை என்று துணிந்து கூறலாம். பாட்டில் பல்வேறு வண்ணங்களுக்கும், சொற்சுவை, 'பொருட்சுவை, கருத்தாழங்கள் ஆகிய அழகுகளுக்கும் தமிழ் மொழி வற்றாத பொய்கை.

வள்ளுவன் இருக்கட்டும், சங்க காலச் சான்றோரும், காப்பிய காலப் புலவர்களும் இருக்கட்டும். கவிதையில் பக்திப் பெருவெள்ளம் பாய்ச்சிய ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் நம்மாழ்வாரும் இன்னபிற நல்லிசைப் புலவர்களும் இருக்கட்டும், அபிநய கவிநாதன் கம்பனும் ஜெயங்கொண்டாரும் கூத்தனும் வில்லியும், குறவஞ்சி ஆசிரியரும் கோபால கிருட்டினருப் போகட்டும்!

பாரதிக்கும் கவிமணிக்கும் பின்பு இன்னும் எத்தனை எத்தனையோ தமிழ்க் கவிஞர்கள் கவிமழை பொழிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். புதுச் சுவையோடு புதிய உருவங்களில் புதிய கருத்துக்களைப் பாடுவதாகத்தான் பாடுகிறார்கள். இளங்கவிகளும் புத்தம் புதியவராக நான் தவறாமல் காட்சிஅளித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

கவிதை அரங்குகளும் வானொலி நிகழ்ச்சிகளும் பதிப்பகங்களும் வெளியீடுகளும் மென்மேலும் கவிதா வேகத்தையும் ரசனைத் திறனையும் பெருக்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

எனவே இன்றையத் தமிழனுக்கு ஒப்பு நோக்கவும் உறுதியாக முடிவு கட்டவும்-இவற்றை நன்றாகச் சுவைத்தறிந்து செய்யவும்-வேண்டிய திராணி வளர் பிறையாய் விளங்குகிறது. எனவே, வளரும் அந்தத் தமிழறிவு, வளரும் அந்த சுவைச் செல்வம், வளரும் அந்த விமர்சனப் புலமை, வளரும் அந்த ஜனநாயகப் புதுப் பார்வை-புதியனவோ பழையனவோ கவிதைகளை அளக்கிறது; அளக்கும்; போகப் போக வெற்றிகரமாக அளக்கும் என்பது நம்பிக்கை. மேற்கூறிய தமிழர்-ஜனநாயகப்பட்டு வரும் தமிழ்ப் பெருமக்கள் மேற்படிப் பார்வையோடு ''ரகுநாதன் கவிதைகளை'' உரைக்கல்லில் ஏற்றி மாற்றுக்காட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலில் ''நாம்'' என்ற கவிதை தொடங்கி ''சாந்தி நிலவுக'' என்ற கவிதை ஈறாக 34 கவிதைகள் அடங்கியிருக்கின்றன அவை கவியரங்கங்களிலும் வானொலியிலும் பத்திரிகைகளிலும் மாநாடுகளிலும் இதர வைபவங்களிலும், அவற்றையொட்டியும் பாடப்பட்டவை.

கவிதைகளின் தலைப்புகளே ஆசிரியரின் இலட்சியப் பார்வையையும், கருத்தோட்டத்தையும் உள்ளொளியையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சென்ற 10 ஆண்டுகளில், நிகழ்ந்தபற்பலசர்வதேசிய,தேசிய,இராச்சிய ஸ்தல நிகழ்ச்சிகளின் எதிரொலிகளை சுத்தத்தோடு கவிதையாக வடித்தளித்திருக்கும் பொழுதே, திருச்சிற்றம்பலக் கவிராயர் இந்தக் கவிதைகள் ஒவ்வொன்றிலும், தமது கலைத் திறனின் தன்மையையும் தரத்தையும் முத்திரையிட்டிருக்கிறார் என்பதையும் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

''நாம்'', ஓய்ந்திருக்க மாட்டோம்.'' ''செயலும் செல்வமும்'' என்ற முதல் மூன்று கவிதைகளின் வழி, கவிராயர் தம்மை பாட்டாளி மக்கள் புலவர் என்று தெரிவித்துக் கொள்ளுகிறார்.

''வையம் தழைத்திடச் செய்தவர் நாம் புவி
வாழ்வை வளம் பெறச் செய்தவர் நாம்
ஐயம் திரிபு சந்தேகமின்றி உல
காளப் பிறந்தவர்...

என்ற சீரிய அடிகள் பாட்டாளி வர்க்கத்தின் எதிர்கால நம்பிக்கையை முழு மூச்சோடு எக்காளமிடுகின்றன.

''எங்கள் சக்தி யோர்ந்தோம்-இனி
இன்பம் காண்போம் என்றே
பொங்கி எழும் மக்கள்-வர்க்க
போத ஞானம் பெற்றுச்
சங்கநாதம் செய்யும்-அந்தச்
சத்தம் கேட்கும் மட்டும்
தங்கி நிற்க மாட்டோம்-பின்
தங்கி நிற்க மாட்டோம்''

என்று கவிராயர் அற்புதமாக இருதயத்தைப் பிழிந்து தீட்டியுள்ள வரிகளைப் படிக்கும்போதும்,

''ஓய்ந்திருக்க மாட்டோம்-தலை
சாய்ந்திருக்க மாட்டோம்''
''களைத்திருக்க மாட்டோம்-உளம்
சளைத்திருக்க மாட்டோம்''
''ஆவி சோர மாட்டோம்-மன
அமைதி காண மாட்டோம்''
''கண்ணுறங்க மாட்டோம்-எங்கள்
கருத்துறங்க மாட்டோம்''

என்பன போன்ற வரிகளைப் படிக்கும்போதும்,

''தொழிலாளி வர்க்கமும் பெண்குலமும் காலனி நாடுகளும் அடிமைப் பட்டுக் கிடக்கும் வரை நான் நிம்மதியாக

இருக்க மாட்டேன் என்று அகில உலகப் பெருங் கலைஞ ஞாகிய ரோமேன் ரோலந்து முழக்கிய கலைஞனின் கடமை முழக்கம் எனது காதுகளில் ஒலிக்கின்றன.

"ஓடு பிளந்திடும் கோடையிலே—நெற்றி
ஓடை நீர் பாய்ச்சிப் பயிர் காப்போம்"

என்று பாடி கவிராயர் சமுதாயத்தில் உழவனின் இடத்தை யும் தரத்தையும் நெஞ்சுருக எடுத்துக் காட்டுவது சமூக அநீதி ஒழியும்வரை நமது நெஞ்சை உறுத்திக் கொண்டே இருக்கும்.

இனி "யாமறிந்த கம்பன்" "கம்பன் என் காதலன்"; "இளமைத் தமிழ்" 1949, 50, 51, 52 ஆம் ஆண்டுகளில் முறையே பாடப்பட்டவையாகும்

"கவி ராஜா! சொல்லுவதைச்
செவி சாய்த்துக் கேளுமையா

இங்கு சிலர்,

மாவட்டம் பல கூட்டி
மாநாட்டுப் பந்தரிட்டு
பாவட்டா மேல் தூக்கிப்
பறக்க விட்டு கையதனில்
தீ வட்டி ஏந்தியுமைத்
தீய்த்துவிட வேணுமென்று
கூவித் திரிகின்றார்!

நீரோ—

ஆரியனாம் ராமனுக்கு
அடிவருடி ஆனீராம்;
வீரியனாம் ராவணனை
விழுத்தாட்டி விட்டீராம்!
சாதிவருணா சிரமச்
சதி தனக்கு ஆளாகி

ஆதித் தமிழ் குடிக்கு
அநியாயம் செய்தீராம்!
தாய்மொழிக்குக் கேடு பல
தானிழைத்தீர் என்று சொலி
வாய்கிழியப் பேசியுமை
வைக்கின்றார்.
மேலும் நீர்
ஆஸ்திகம் பேசினீராம்!
ஆரியர்கள் கூறிய பொய்ச்
சாஸ்திரத்தைக் கதைத்தீராம்!
சங்கத் தமிழ்க் கவிஞர்
மோஸ்தரிலே பாடாடல்
முழு மோசம் செய்தீராம்!
வாஸ்தவமா இது வெல்லாம்!
'வழக்குரையும்' அன்னவர்தம்
வாதுக்குப் பதிலுரைத்தோம்!

என்று கவிராயர் கம்பனிடமே நேரில் கேள்வியைக் கிளப்புவதும் அதற்கு மாமேதையான கம்பன் தனது காப்பியத்திலிருந்தே உண்மைகளை எடுத்துக் காட்டி ஆணித்தரமாய் பதிலுரைப்பதும் அருமையிலும் அருமை!

இது மட்டுமன்று. இடைச்செருகல், இஷ்டம் போல் உரைகள் முதலிய பல வாரங்களைப் பற்றியும் ஐயம் திரியு அறும் பொருட்டு கம்பநாடனிடமே கேள்விகள் போட்டுப் பதிலும் பெறுகிறார்.

"சாகாத் தமிழ் மொழிக்குச்
சஞ்சீவி என்ன ஒரு
மாகாவியம் செய்து
மண்ணில் நிலை பெற்றேன்
தமிழுக்குக் கதி மோட்சம்
தந்தேன்; அம் மொழியை
அமிழ்தமெனச் சொல்லுதற்கும்
அடிவானம் போட்டு வைத்தேன்"

என்று கம்பன் சொன்னதாகக் கவிராயர் சொல்லுகிற பொழுது நமது தமிழுணர்ச்சி எவரெஸ்ட் முகட்டில் ஏறி நின்று எக்களிப் படைகிறது!

இது மட்டுமா?

‘‘கன்னியே ஆனாலும்
கவிதை இது வென்று
உன்னி உணர்வதற்கும்
உள்ளத்தில் திறமுண்டு
சின்னஞ் சிறுபுலமை
செப்படி வித்தைப் புலமை
கன்னமிட்டுக் கவிதைதனில்
கை வைக்கும் பொய்ப் புலமை
சன்னமாய்ச் செந்தமிழைச்
சாகடிக்கும் வெறும் புலமை
இன்ன தென அறிவதற்கும்
இதயத் தெளிவுண்டு’’

என்று பாடி கவிராயர் போலிப் புலமையையும் புரட்டுப் புலமையையும் கொல்லு கொல்லென்று கொல்லுகிறார்.

அதே பொழுதில்,

‘‘கொல்லும் இலக்கணத்தின்
கொத்தடிமை ஆகாமல்
சொல்லுக்குச் சொல்லழகு
சுகமாய்ச் சுதி கூட்டக்
கல்லும் கனிந்துருகக்
கவி சொன்ன மாராசன்’’

என்றும்

‘‘சந்தத்தின் இங்கிதமும்
செந்தமிழின் மெய்யழகும்
சிந்தனையின் லட்சியத்தின்
சிகரத்தின் பொன்னொளியும்

தந்தெனக்கு என்னுளத்தைத்
தன்னடிமையாக்கி விட்ட
பொன்னடியான் அந்தப்
புலவன் திருக் கோமான்!

என்றும்

''பாவியரின் பண்பையெல்லாம்
பண்ணமைப்பில் தான் படைத்த
காவியத்தின் ஜீவியத்தில்
காட்டிவிட்ட கம்பனவன்
ஆவி குளிர வந்த
அமுதக் கவிக் குமரன்
கோவில் கொண்டான்! என் மனமே!
குடிக் கொண்டான்!

என்றும் பாடி, கம்பன் காதலில் களிக் கூத்தாடுகிறார். கவிராயர். இவர் பாட்டைக் கேட்டால் நமக்கும் தான் கம்பன் மீதும் கன்னித் தமிழ் மீதும் காதல் சுரந்து:

''மோடி கிறுக்குதடி பெண்ணே—நல்ல
மொந்தைப் பழைய கள்ளைப் போலே''

என்று பாரதியோடு சேர்ந்து பாடத் தோன்றும்.

'இளமைத் தமிழ்'' என்ற கவிதையில், தமிழ் அன்னையை,

''பந்தனமும் பங்கிகளும்
பாடி யொரு மோடிசெய்து
வந்தவரை போனவரை
வழி பார்த்து காசுக்காய்
முந்திதனை விரிக்கும்
மூடப் புலவோர்கள்
வந்தவழி வாராத
வாலை இளங்குமரி''

என்றும்.

"போயொழிந்த பண்டையநாள்
பொருளும், அலை கடலின்
வா யொழிந்த இலக்கியமும்
வாராதோ என்றலறி
ஓடிவிட்ட முயலெண்ணி
ஒரு கோட்டை நீர் வடித்து
நாடியிலே கை யூன்றி
நவரத்ன ஒப்பாரி
பாடுகிற பழம் பத்தாம்
பசலியரின் பக்கத்தே
நாடி நெருங்காத
நாயகியாள் தமிழ்க் கன்னி"

என்றும்,

"மூச்சு விட்டால் மூச்செடுத்தால்
முன்மோனை பின் மோனை
பேச்சுக்கு முந்நூறு
பிராசநயம் போட்டு
வீசி விளாசுகின்ற
விருதா பெறும் புலமை
நீசத்திருக் குழுவின்
நிழலில் ஒதுங்காதாள்!"

என்றும்,

"கம்பன் காவியத்தின்
கவிநயத்தைப் பாராமல்
வம்பன் அவன்! ஆசிரியர்க்கு
வால் பிடித்தான்!" என்றெல்லாம்
கும்பலிட்டு தீக் கொளுத்திக்
கூட்டமிடும் பேர்வழியும்,
"கையாளும் காதையினைக்
கற்பனை யெனத்தேறாமல்
மெய்யாய் அதை நம்பி

மீசை துடித்தாலும்
கூவி அழைத்தாலும்
கூக்குரல் இட்டாலும்
காவியத்து நாயகியாள்
கண்ணெடுத்தும் பாராதாள்''

என்றும், பாடி கவிராயர் பற்பல புலமை வக்ரங்களை தமிழன்னையின் பேரால் தனக்குரிய பாணியில் வன்மையாக விமர்சிப்பது தமிழ் வளர்ச்சிக்கான எழுத்துப் பணியில் அவர் எத்தகைய போக்குகளை வெறுக்கிறார் என்பது தெளிவாகிறது.

இந்த அழுத்தமான விமர்சனம் நல்லிசைப் புலவர்களுக்கு உடன் பாடாகும் என்பதே எனது துணிவு.

தமிழ்த்தாய், யாரைக் காதலிப்பாள், யாருக்கு அருள் புரிவாள் என்பதை மிக நேர்த்தியாக,

''நாடிவரும் பேரையெலாம்
நச்சாது நற்றமிழைப்
பாடி வளர்த்து வரும்
பாவாணரைச் சார்ந்து
மோடி கிறு கிறுக்கும்
மோகினியாள்! உலகுய்யப்
பாடும் புலவருக்கே
பாட்டின் உயிராவாள்''

என்றும்,

''வருத்தம் பசி துன்பம்
வாட்டுகின்ற காலத்தும்
கருத்தில் தெளிவாற்றல்
கவிதைப் பொருளமைதிப்
பொருத்தம் பொருளாழம்
பொய்யாத மெய்ஞ்ஞானம்
சிந்தனையில் முற்போக்கு

செயலில் துணி வாற்றல்
எந்தெந்தக் காலத்தும்
ஏற்ற புதுமை வழி
ஆன இவையெல்லாம்
அழகாகக் கூடிவர
கூனுடைய பூமாந்தர்
குறையெல்லாம் போக்கி அவர்
மானிடராய் வாழுமொரு
மார்க்கம் தனைவகுக்கும்
காரியத்தில் ஈடுபட்டுக்
கவிதைப் பணி புரியும்
வீரியர்க்கே தமிழ்க் கன்னி
விரும்பி அருள் புரிவாள்!''

என்றும் பாராட்டி முழக்குகிறார்.

இந்த அடிகளிற் கவிராயர் இன்றையக் கவிஞனுக்கு—மக்கள் ஜனநாயகக் கவிஞனுக்கு இருக்க வேண்டிய குறிக்கோள், போர்முறை, கவிதைப் பணி, வாழ்வு நெறி ஆகியவற்றைப் பற்றிய தமது வரையறுப்புகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

''காற்று'' என்ற கவிதையில் கவிராயர் தமது பேராவலை அடுக்கி அடுக்கிச் சொல்லும்போது நமது புதுமைப் புரட்சி உணர்ச்சி தேன் குடித்த நரி மாதிரி சொக்குகிறது.

''சுதந்திரம்'' என்ற கவிதையில் அவர் காட்டும் பார்வைக் கோணமும், நிற்கும் இடமும், கொட்டும் இதயப் பிழிவும் மக்கள் கவியின் இலக்கணத்தை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

''துஞ்சலுமிலர்'' என்ற கவிதை பழைய பாட்டை புதிய நோக்கோடு எவ்வாறு பார்க்கவேண்டுமென்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இடமின்மையால் சுருக்குகிறேன். இந்தத் தொகுப்பி லுள்ள எல்லாக் கவிதைகளும் வரவேற்கத் தக்கவை. சுவைத்துச் சுவைத்து இன்பமும் பயனும் பெறத் தக்கவை.

''வாழ்க்கை வளமுற-அறிவு'' ''கூச் பீஹாரில் கொலையுண்ட குமரிக்கு'' ''பிள்ளை இதோ பிள்ளை"

''அன்னைத் தமிழ் தாயகமே வெல்க! வெல்க!'' 'வாழி நீ கொரிய நாடே'' ''சமாதானம்'' ''பேருக்கா கலைக்கழகம்?'' ''மகாத்மா''

''சாந்தி நிலவுக'' என்ற பாட்டுக்களையும்—எந்த ஒரு பாட்டை எடுத்துப் படித்துச் சுவைத்தாலும், ஜனநாயக சமதர்ம-சமாதானக் கவிஞர்கள்வரிசையில் மக்கள் புலவர் என்ற பெருமையோடு, நமதுதிருச்சிற்றம்பலக் கவிராயர் இன்று தமிழகத்தில் முன்னணியில் நிற்கும் பேறு பெற்றுள் ளார் என்பதைக் கண் குளிரக் காணலாம்.

எளிய நடையில் சாதாரண சந்தத்தில் சரளமாக சொல் நயத்தோடும், பொருள் ஆழத்தோடும் கற்பனைத் திறன் வழிய, புதுமை குலுங்கக் கவிராயரின் கவிதைகள் ஓடுவதும் ஒலிப்பதும் கவிராயருடைய சுவைஞர் (ரசிகர்) வரிசையை விரிவாக்குகிறது.

''ரகுநாதன் கவிதை'' யை தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் படிக்கவும், பாடவும் ஆன நிலைமை ஏற்படுவதுதான் தமிழ் மக்கள் கவிராயருக்குச் செய்யும் கைம்மாறும் கொடுக்கும் உண்மையான ஆதரவும் ஆகும். கவிஞர்களும் கலைஞர்களும் இந்நூலை வாங்கிப் படிப்ப தும் துய்ப்பதும், அது காட்டும் புதிய பாதையை புரிவதும் தெரிவதும் புதிய தமிழகத்தில் சரியான ஜனநாயகத் திசை யில் ''கவிப் பெருக்கும் கலைப் பெருக்கும்'' ஓடப் பெருந் துணை செய்யும் என்பது திண்ணம்.

கவிராயர் இன்னும் பல்லாயிரம் பாடல்களைப் பாடி தமிழகத்தின் கலைப் பணியில் முன் நிற்பாராக!

இவ்வெளியீட்டின் மூலம் நற்பணி புரிந்து விளங்கும் ஸ்டார் பிரசுரம் மேன்மேலும் இத்திசையில் வலிவும், பொலிவும் பெறுவதாக!

ஜனசக்தி 15-6-57

(ரகுநாதன் கவிதைகள் என்ற
நூலிற்கு ஜீவா எழுதிய
மதிப்புரை.)

# கம்பனும் மில்டனும்

கம்பன் தமிழ் மொழியின் கவிச் சக்கரவர்த்தி, மில்டன் ஆங்கில மொழியில் நேர் நிகரற்ற காப்பியப் பெரும் புலவன். மில்டனோடு ஒப்பு நோக்கி கம்பன் பெருமையை வரையறுத்துக் காட்ட முயல்கிறது இந்நூல்; இது ஒரு சிறந்த புது முயற்சி.

''கல்லையும் தீயையும் சேர்த்தே—நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்தே
தெள்ளு தமிழ் புலவோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்''

என்று பாடிய கவியரசன் பாரதிதான்,

''யாமறிந்த புலவரிலே...
கம்பனைப் போல்...
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை''

என்று பாடுகிறான்.

தமிழ்ப் புலவர் மரபு வள்ளுவனையும், கம்பனையும் தான் ''தெய்வப் புலமை'' (அருட் புலமை) மிக்கவர்கள் என்று அறுதியிட்டு உறுதி கூறி வருகிறது.

ஆங்கிலம் வல்ல தமிழ்ப் பேரறிஞர்கள், ஷேக்ஸ்பியருக்கும் ஹோமருக்கும் மில்டனுக்கும் தாந்தேக்கும் கம்பன் இளைத்தவனல்ல என்று கூறி வந்திருக்கிறார்கள். வட மொழி வல்ல தமிழ்ப் பெரும் புலவர்களில் சிலர், முதல் நூலாசிரியரான மகாகவி வால்மீகியையும் கம்பன் மிஞ்சுகிறான் என்கிறார்கள்.

பன்மொழிப் புலமை சான்றவரும் ஒப்பற்ற விமர்சகருமாக விளங்கிய வா. வே. சு. ஐயர்; கம்பன் உலக மகாகவி

களில்ஒருவன்மட்டுமல்ல;ஹோமர்,வர்சில்,தாந்தே,மில்டன் இன்னோரன்ன இதர மொழி இலக்கிய மேதைகளின் பேரிலக்கியங்களான இதிகாச காப்பியங்களையும், மூல நூலான வால்மீகத்தையும் கம்பன் காப்பியம் சிற்சில துறைகளில் சிற்சில வகைகளில் மிஞ்சுகிறது" என்று ஆணித்தரமாக எடுத்துக் காட்டியுள்ளார். தற்கால மேனாட்டு இலக்கிய விமர்சனக் கலையின் கோட்பாடுகள்-கருத்துக்களின் அடிப்படையில் விமர்சனம் செய்தே மேற்படி முடிவைக் கூறுகிறார்.

''நம்புபாமாலையாலே
நரர்க்கின்னமுதம் ஈந்தான்''
''அபி நவ கவி நாதன்''
''கம்பன் மொழி செந்தமிழின்
கவித் திறத்தின் காட்சி கண்டும்''
''கற்றார் கவியிற் பெரிதாம்
தமிழ்க் கம்ப நாடன்...
''கம்ப நாடன் கவிதையைப்
போல் கற்றோர்க்கு இதயம் களியாதே''
''விருத்தமெனும் ஒண பாவில்
உயர் கம்பன்''

என்றெல்லாம் முன்னாளில் பல புலவர்கள் பாடிய பாடல்களும் சரி;

''உயர் கம்பநாடனுடன் கவிதை போயிற்று'' என்று பின்னால் பாரதி பாடிய பாடலும் சரி; அப்பால்;

''கம்பனை மறந்தாலும் தமிழேது?
கவிதை என்பதும் கமழாது''

என்று நாமக்கல்லார் பாடியதும் சரி; கம்பன் காப்பியத்தை வைத்துச் சுவைத்துக் கிடைத்த அனுபவத்தின் பொதுப் பண்பான பாராட்டு எதிரொலிகளே ஆகும்.

வித்வான் கிருஷ்ணசாமி முதலியாரும் 'கம்ப நாடர் செல்வகேசவராய முதலியாரும், மகா வித்வான் ராகவ

அய்யங்காரும், கணேசபிள்ளையும் செய்குத் தம்பிப் பாவலரும் இன்ன பிறரும் எழுத்தாலும் சொற் பெருக்காலும் கம்பன் பாடற்களிற் கண்ட நயப்பாடுகளையும், ''கம்பன் கவிதை''யைப் பற்றிய பொதுப்படையான கருத்துக் களையும் மட்டுமே தமிழ் மக்களுக்கு வழங்கினார்கள்.

வா. வே. சு. அய்யரின் விமர்சனத்தைப் போன்று தற்கால முறையில் கம்பனை ஆராய்ந்து பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் கே. என். சிவராஜ பிள்ளை, பி. ஸ்ரீ. ஆச்சாரியா, வையாபுரிப்பிள்ளை, டி. கே. சி. ஆகியத் தமிழ்ப் பேராசிரியர்கள்.

கம்பன் காப்பியம் முழுவதையும் பற்றி, அதன் காப்பியக் கட்டுக்கோப்பு, கவிதை, பாத்திரப் படையல், கதைவளரும் பாங்கு, நாடகபாவம் ஆகிய கூறுகளை முறையாகவும் முழுமையாகவும், நயப்பாடுகள், தன்மை-தரம் ஆகியவற்றை விளக்கமாகவும், எழுதப் பெற்ற விமர்சன நூல்கள் குறிப்பிட்டுக் காட்ட இதுவரை ஒன்றேனும் வெளி வரவில்லை, கம்பராமாயணத்தை ஒட்டிய குறிப்பிட்டப் பொருள்களைப் பற்றிய விளக்கக் கட்டுரைகள் தான் வெளி வந்துள்ளன. இந்த இனத்தில் கம்பன் கவிதை என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் குறிப்பிடத்தக்கது.

வை. மு. கோவின் பதிப்பில் மட்டுமே இன்று கம்பராமாயணத்தின் எல்லாக் காண்டங்களுக்கும் உரை கிடைக்கிறது. வெள்ளேக்கால் முதலியாரின் கம்பராமாயண சாரமும், டி.கே.சி., பி. ஸ்ரீ. ஆகிய கம்பனில் முங்கி மூழ்கிய பெரியார்களின் கம்பன் கவிதை விளக்கங்களும் கம்பனிடம் நம்மை அழைத்துச் செல்லும் தகுதி சான்றவை. ஆய்வு நிறை குடம் வையாபுரிப் பிள்ளையின் ஆராய்ச்சிப் பதிப்பும் மதிப்புக்குரிய நண்பர் முருகப்பாவின் இராம காதை பாலகண்டம் அயோத்திமாகாண்டம் பதிப்புகளும் குறிப்பிடத்தக்கவை. காரைக்குடி கம்பன் கழகத்தின் பணியும் அதன் செயலாளர் சா. கணேசனின் அரும்பணியும் தமிழ் மக்களின் நன்றியறிதலுக்கு உரியவை,

ஆங்கில உலகுக்குக் கம்பனை அறிமுகப்படுத்தியுள்ள வ. வே. சு. அய்யரின் அரும்பணியும் கம்பன் கவிதைகளை ஆங்கிலப்படுத்தி வரும் பேராசிரியர் சீனிவாச ராகவனின் தமிழ்த் தொண்டும் பெரும்பயன் விளைப்பன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஈடுபட்டுள்ள கம்பன் காப்பியத்தின் திருந்திய பதிப்பையும் தமிழ் மக்கள் இமைகொட்டாது எதிர்பார்ப்பர் என்பதில் ஐயமில்லை.

தமிழ்க் காப்பியங்களில் தமிழ் மக்கள் நிரம்ப அனுபவித்திருப்பது கம்பன் காப்பியம். பண்டிதரும் பாமரரும் நிறைய நுகர்ந்திருப்பது கம்பன் காப்பியம். நிரம்ப மக்கள் தெரிந்திருப்பதும் கம்பன் காப்பியம். மிக்கு புகழ் எய்தி ஒளிர்வதும் கம்பன் காப்பியம். எனவே கருத்துக் குரோதிகளின் கூடிய கண்டனத்திற்கு இரையாவதும் கம்பன் காப்பியம்; அதிகமதிகம் இடைச் செருகலுக்கு இரையாகி இருப்பதும் கம்பன் காப்பியமே.

சுத்தமான திருந்திய பதிப்பு வேண்டும். தமிழ்த் தாத்தா சாமிநாத அய்யர், வையாபுரியார், முருகப்பா போன்றோர் சென்ற வழியில் புதுமுறையில் நவீனக் கண்ணோடு ஆய்வு முறை நூற்கள் வேண்டும். வ.வே.சு, அய்யர் காட்டிய வழியில் நவீனமுறைப் பிரசாரம்-பாமர-பண்டித ரஞ்சிதமாக இலக்கியக் கலை அழகு சொட்டச் சொட்ட-கவிதைச் சுவை தித்திக்கத் தித்திக்க வேண்டும், டி.கே.சி. வழியில் முன்னேறி சரித்திரக் கண்ணோடும் எதார்த்தப் பார்வையோடும் கம்பனை எடைபோடும் நூற்கள் பல்கிப் பெருக வேண்டும், காரைக் குடியைப் பின்பற்றி கம்பன் கழகங்கள் எழவேண்டும். இலக்கியம்-கலையை முன் வைத்து!

இந்த நூலாசிரியர் ஏனையோர் செய்யாத ஒரு அரும் பணியை கம்பனுக்கும் கன்னித் தமிழுக்கும் செய்கிறார். அது என்ன?

ஆங்கிலம் கற்றவர்களே புரிந்துக் கொள்ளக் கடினம் என அங்கலாய்க்கும் மில்டன் என்ற ஆங்கிலக் கவிஞர்

கோமானின் தலை சிறந்த அமர காப்பியமாகிய ''சுவர்க்க நீக்கம்'' என்ற பெருங்காப்பியத்தை தமிழ் வாசகர்களுக்கு நல்ல மாதிரியாக அறிமுகம் செய்து வைக்கிறார். தமிழ் கனிந்த புலவரான வெள்ளைக்கால் முதலியார் அவர்கள் ''சுவர்க்க நீக்கத்தை'' கவிதை உருவில் தமிழில் அருளி யிருக்கிறார்கள் என்பது மெய். எனினும் புதிய முறையில் கோடிக் கணக்கான தமிழர்களிடையில் கொண்டு செல்லும் பேறு ஆசிரியர் இராமகிருஷ்ணன் அவர்களுக்குக் கிடைத் துள்ளது. ''சுவர்க்க நீக்கத்தை'' அறிமுகப்படுத்துவதன் மூலம் மில்டனின் அரிதிற் காணவல்ல திருவுருவத்தையும் கவிதா மேதா விலாசத்தையும் கொள்கைப் போர்த் திற னையும் விண்டு காட்டுகிறார். மில்டனோடு கம்பனைக் கொண்டுவந்து நிறுத்தி ஒப்புமைகளையும் மிக்குடைமை களையும் அலசிக் காட்டி, கம்பநாடன் ஏற்றத்தைப் போற்றிப் புகழ்கிறார். இதை ஆசிரியர் புதிய முறையில் புதிய பார்வையில், புதிய பாணியில் சொல்கிறார். தமிழில் இத்தகைய நூல்கள் அருமை, எனவே நூலின் பெருமை மேலும் உயர்கிறது.

ஆசிரியர் காரைக்குடி கம்பர் விழாவில் பேசிய பேச்சின் விரிவுரைத்தான் இந்நூல்.

'கம்பனும் மில்டனும்' 'சுவர்க்க நீக்கத்தை' காவிய அமைப்பு, இலட்சியக் கனவு, மந்திராலோசனை; ''சாத் தானும் இராவணனும்,'' என்ற ஏழு தலைப்புகளில் ஆசிரியர் இந்நூலை செய்து தந்திருக்கிறார்.

முதற் பகுதியில் உலக மகாகவிகளில் இருவரான கம்பனையும் மில்டனையும் அருமையாக ஒப்பு நோக்கிக் காட்டுகிறார். கம்பனுடைய மேம்பாட்டைச் செம்மையாக விளங்க வைக்கிறார்-புதிய பார்வையில்.

இரண்டாவது பகுதியில் ஏறத்தாழ 19 பக்கங்களில் 'சுவர்க்க நீக்கக்'' கதையைச் சொல்கிறார்-ஆசிரியர் தமது அலாதிப் பாணியில். மூன்றாவது பகுதியில் கா பிய அமைப்பைக் கூறுகிறார். ''விவிலிய நூலில் கிடைத்த சில

கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, கற்பனை செய்ய முடியாத காலத்தையும் இடத்தையும் பாத்திரங் களையும் தன் மனோபாவனையின் உதவியால் உருவாக்கி ஓர் அற்புதமான காவிய மாளிகையை மில்டன் படைப் பதை'' காட்டுகிறார். அடுத்து, இராமாயணத்தின் ஒவ் வொரு காண்டத்தின் அமைப்பையும் விமர்சனத் தேவை யின் அளவுக்கு எடுத்துக் காட்டுகிறார். "சுவர்க்க நீக் கத்தை" விட நான்கு மடங்கு பெரிதான இராமாயண காப் பியம் சொல்வளம், பொருள்வளம், மனோபாவ வளம் முத லிய எவ்வளமும் செவ்வையுற, காப்பிய நயமும் பாலும் தேனும் கலந்த வண்ணம் இனிது கலந்து குறைவற்ற பெருங்காப்பியமாகத் திகழ்கிறதென்று எடுத்துக் காட்டு கிறார்.

நாலாவது பகுதியில் இருபெரும் மேதைகளின் குறிக் கோள்களை எடுத்துக் காட்டி, கோசல நாடு, அயோத்தி நகர் வர்ணனைகள் மூலம் கம்பனின் லட்சியக் கனவான சமுதாய நலக் கருத்துக்களைப் புது மெருகிட்டு ஆசிரியர் காட்டுகிறார்.

ஐந்தாவது கூறு மந்திராலோசனை. இதில் மில்டனும் கம்பனும் எப்படி மந்திராலோசனை நடத்துகிறார்கள் என்பதைக் காட்டி, ஒப்பு நோக்கி மந்திராலோசனைப் படலத்தில் மில்டனைப் போல் கம்பன் சிறக்கவில்லை என்று ஆசிரியர் தனக்குரிய சரித்திரப் பார்வையோடு முடிவு கட்டுகிறார்.

இந்த இரு பெரும் புலவர் பெருமக்களின் இடமும் காலமும் வேறானதால் அனுபவமும், வேறாகி எழுத்திலும் வேறுபாடு காணப்படுவது கவனிக்கத் தக்கது.

சட்டசபை, ஜனநாயக அனுபவம் கம்பனை விட மில்டனுக்குத்தான் கிடைக்க முடிந்தது. அதன் எதிரொலி 'மந்திராலோசனை'யில் கேட்கிறது.

ஆறாவது பகுதியில் சாத்தானையும் இராவணனையும் சீர்தூக்கிக் காட்டுகிறார் ஆசிரியர். மில்டனின் காப்பியத்தில் மகோன்னதப் படைப்பாகத் துலங்குகிறவன் சாத்தான்தான். அந்த சாத்தானைவிட கம்பனின் இராவணன் சிறந்த படையலாக விளங்குகிறான் என்பதை எடுத்துக் காட்டி ஆசிரியர் கம்பநாடுடைய வள்ளலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்.

இறுதிப் பகுதியாகக் காப்பியத் தலைவன் என்ற பகுதியில் மில்டனின் காப்பிய நாயகனான கடவுளைவிட கம்பனின் காப்பிய நாயகனான இராமன் மிகமிகச் சிறந்த முறையில் படைக்கப்பட்டிருக்கிறான் என்று ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். இராமன் வாழ்வில் இதர பாத்திரங்களோடு மோதும்பொழுது வெளிப்படும் மானிடத்தின் சீரிய சிறந்த குணவீச்சுக்களை பலபடச் சுட்டிக்காட்டி மனித லட்சியத்தின் பிரதிநிதியாக இராமன் அறிதொறும் அறிதொறும் காட்சியளிப்பதை கம்பனின் மானிடம் காட்சியளிக்கிறது என்று ஆசிரியர் எடுத்துக்காட்டுவது ஒவ்வொரு தமிழனும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

ஜனநாயகத் திசை வழியில் வளரும் தமிழனுக்கு இந்நூல் பயன்படு நூல் என்பது எனது கருத்து.

'கம்பன் வம்பன்; கம்பன் தமிழ்த் துரோகி' என்று கூறித் திரியும் "நல்லோர்" பொறுப்புடைமையுடன் இந்த நூலிலும் இதுபோன்ற நூற்களிலும் கம்பனைப் பற்றிக் கூறப்படும் கருத்துக்களை உரைக்கல்லில் ஏற்றுவார்களாயின் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை செய்தவர்களாவார்கள்.

கம்பனை மென்மேலும் அறிந்து ஏற்றிப் போற்றிவரும் தமிழுலகத்தில் ஆசிரியரின் இத்தகைய அரும் பணிக்கு வளரும் ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.

இத்தகைய தமிழ், தமிழன் வளரத் தேவையான நூற்கலை மேன்மேலும் வெளியிட்டு வரும் 'ஸ்டார் பிரசுரத்தாருக்கு' தமிழ்ப் பெருமக்கள் நன்றியும் ஆதரவும் காட்டகடமைப்பட்டிருக்கிறார்கள்.

—ஜனசக்தி—8-6-'57

(திரு. எஸ். இராமகிருஷ்ணன் எழுதிய 'கம்பனும் மில்டனும்' என்ற நூலிற்கு ஜீவா எழுதிய மதிப்புரை)

# வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்

இலக்கிய உலகில், திருக்குறளுக்கு ஈடு இணை, நேர் நிகர் ஒப்பு உவமை கிடையாது. தமிழ் இலக்கியத்தில் அது தான் பெருஞ் செல்வம்

வள்ளுவனின் வான்மறை உலகப் பொதுநூலாக ஒளி வீசி ஓங்குகிறது.

இருபதாம் நூற்றாண்டு இயேசுநாதர் என்று அழைக்கப்படுகிறவரும் இன்றைய உலகத் தத்துவ ஞானிகளில் முதல் வரிசையில் வைக்கப்படுகிறவருமான ஆல்பர்ட் ஷுவைஸ்டர் என்ற பேரருளாளப் பெரியா பாரதச் சிந்தனையாளர்களில் வள்ளுவனுக்கே முதலிடம் கொடுக்கிறார்' வேதங்கள், உபநிடதங்கள், கீதை, மனு நூல், சமணம் பௌத்தம் ஆகியவற்றின் கருத்தோட்டங்களோடு வள்ளுவத்தின் கருத்தோட்டத்தையும் ஒப்பு நோக்குகிறார். வாழ்வுக்கு உறுதி குறளுக்கு நிகர் குறளே என்று ஆணித்தரமாக விளக்கிக் காட்டுகிறார்.

உலகியல் தெரிந்தவர்களெல்லாம் சென்னிமிசை வைத்து ஏற்றிப் போற்றிவருகிற திருக்குறள், சாதாரண சராசரித் தமிழனுக்குத் தெரியுமா? தெரிய, ஆட்சிபீடமோ, அறிவுக் களஞ்சியங்களோ வாய்ப்போ, வசதியோ உருவாக்கியதுண்டா? இல்லை.

ஆயினும் தமிழின் மறுமலர்ச்சி உணர்ச்சியும் தமிழனின் ஜனநாயக உணர்ச்சியும் அண்மையில் கடல் மடையெனத் திறக்கத் தொடங்கியிருக்கின்றன. சென்ற பத்து ஆண்டுகளில் திறக்குறளின் பெருமை தமிழன் நெஞ்சில் என்றுமில்லாதவாறு விரிவடைந்து வருகிறது.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில்எத் தனைஎத் தனையோ கோணங்களிலிருந்தும்எத்தனை எத்தனையோ

விருப்பு வெறுப்புகளோடும் உரை நூல்களும் கட்டுரைகளும் திறனாய்வுகளும் சித்திரங்களும் சொற் பொழிவுகளும் பாடல்களும் குறளுண்மைகளைத் தமிழன் உணரச் செய்து வருகின்றன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசன் சண் முகனார்களும், வடிவேல் செட்டியார்களும், சோம சுந்தர நாயகர்களும், கதிர்வேல் பிள்ளைகளும், மாணிக்க நாயகர்களும், மறைமலை அடிகளாரும், வேதாந்த சித்தாந்தக் கண்ணோட்டங்களோடும் தமிழ் மருவிய நுண் மாண் நுழைபுலத்தோடும் குறளில் ஆழ்ந்து விளக்கம் தரக்கண்டோம். வ. வே. சு. அய்யர் திருக்குறளை ஆங் கிலப் படுத்தி உலகுக்கு வழங்கியதையும் கண்டோம்.

பரிமேலழகர் உரை மட்டுமன்று மணக்குடவர் உரை போன்ற ஏனைய பழைய உரைகள் சில வெளிவரவும் கண்டோம். பின்னர் தமிழர் தலைவர் வ. உ. சிதம்பர னாரும் தமிழ் பெரியார் திரு.வி.க. வும் முறையே அறத்துப் பாலுக்கும் பாயிரத்திற்கும் பொருளும் விரிந்த விளக்கமும் அருளக் கண்டோம். சைவ சித்தாந்தக்கழகத்தின்பதிப்பைப் போன்று சிறந்த திருக்குறள் பதிப்புகள் வெளிவரக் கண் டோம். சரித்திர ஆசிரியர்களும், தத்துவ ஞானிகளும், விஞ் ஞானிகளும் வித்தகர்களும் பேரறிவாளர்களும் சீரருளாளர் களும் தத்தமது உரைகல்லில் உரைத்து மாற்றுக் காட்டக் கண்ணோட்டம்.

அன்று பாரதியும், அப்பால், அண்மையில் கவிமணி யும், பாரதிதாசனும், நாமக்கல்லாரும், சுத்தானந்த யோகியாரும், வான்மறைக்கும் வள்ளுவப் பேராசானுக்கும் பாமாலை சூட்டக் கண்டோம். நிறைகுடமான வையாபுரிப் பிள்ளை, தமிழ் பழுத்த இராகவ அய்யங்கார்; வரலாறு வல்ல தீட்சதர், ஆராய்ச்சி மிக்க தேசிக விநாயகம் பிள்ளை, நாட்டார், ஔவையார், இராசா மாணிக்கனார் ஆய்வுரைகளையும் கண்டோம். பேராசிரியர் மு. வ. வின் சிறந்த ''வாழ்க்கை விளக்கமும்'' நாமக்கல்

கவிஞரின் விரிந்த விளக்கவுரையும் குழந்தை உரையும் ஆய்வும், திருப்பணந்தாள் மடத்தினரின், அருட் கொடையான "உரை வளமும்" கண்டோம். தென்காசி, கோவை, கொழும்பு வள்ளுவர் மன்றங்களின் சிறந்த சாதனைகளான கட்டுரைத் தொகுப்பு வெளியீடுகளையும் கண்டோம். இன்னும் பலப்பல பற்பல கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், ஆய்வுரைகள் கண்டோம்.

இறுதியாக, ஜனசக்தி பிரசுராலய வெளியீடான சாமி சிதம்பரனார் ஆக்கிய "வள்ளுவன் வாழ்ந்த தமிழகம்" என்ற நூலைக் கண்டோம்.

சாதாரண, சராசரித் தமிழனுக்கு, வள்ளுவப் பெருந்தகையை—தமிழர் தலைமகனை—அறிமுகப்படுத்துவதில் இந்த நூல் தனிச் சிறப்புடையது என்பது எனது பணிவான துணிவான கருத்து.

ஆசிரியர் இந்நூலை, திருக்குறளைப் பற்றிய அறிவை, இதுவரையில் யாரும் அளிக்காத வகையில் புதிய முறையில், ஜனநாயக நோக்கில் அளிக்கிறார். ஆசிரியர் எழுத்தில்—கருத்துக்களை நெய்து தருவதில் சரித்திரப் பார்வை நல்ல மாதிரியில் விழுகிறது.

திருக்குறளைப் பற்றிப் பல்வேறு கருத்தோட்டங்களையும் ஆராய்ச்சிகளையும் ஆசிரியர் நூல் நெடுகிலும் அங்கங்கே எடுத்துக் கூறுகிறார். அதே பொழுதில் தமது கருத்துக்களையும் முடிவுகளையும் அவற்றின் பக்கத்தில் வைத்து வாசகர்களுக்கு ஒப்புநோக்கிமுடிவுகட்டவாய்ப்பளிக்கிறார்.

நூலை நான்கு பகுதிகளாகப் பிரித்தமைத்துச் செய்திகளை வழங்குகிறார் ஆசிரியர்.

முதற் பகுதியில் வள்ளுவனின் பெருமையையும் வரலாற்றையும் நவீன ஜனநாயகக் கண்ணோடு கண்டு காட்டுகிறார்.

திருக்குறள் அமைப்பைப் பற்றியும், பண்டை நூற்களுக்கும், திருக்குறளுக்கும் உள்ள உறவு முறைகளைப் பற்றியும்

வள்ளுவர் காலத்தைப் பற்றியும் புதிய முறையில் விளக்கி சிலபல ஒருதலைக் கண்ணோட்டங்களுக்குப் பதில் இறுக்கிறார். ஆசிரியர்—தமிழர் பண்பு, வள்ளுவர் வழி, மாமிசமும் மதுவும், இடித்துரைத்தல் ஆகிய தலைப்புகளில் பல உண்மைகளை எடுத்துக்காட்டி பிற்போக்குப் புகழ்ச்சி, திரிபுப் புகழ்ச்சி, சரித்திர முரண்பட்ட புகழ்ச்சி, மொழி இனவெறிப் புகழ்ச்சி ஆகிய விஞ்ஞான விரோத இலக்கிய ஆய்வுகளையும் முடிவுகளையும் வெட்ட வெளிச்சமாக்குகிறார்.

இரண்டாவது பகுதியில் அறத்துப்பாலையும், மூன்றாவது பகுதியில் பொருட் பாலையும், நான்காவது பகுதியில் காமத்துப் பாலையும் புதிய வழியில் எளிய முறையில் விளக்கிக் காட்டுகிறார். ஒவ்வொரு பாலையும் யாவரும் புரிந்து கொள்ளத் தக்க சில தலைப்புகளின் கீழ் புதுமை புது நாட்டத்தை வசீகரிக்கத் தக்க விதத்தில் விளக்குகிறார். அறத்துப்பாலை 6 தலைப்பின் கீழும் பொருட்பாலை 4 தலைப்பின் கீழும், காமத்துப் பாலை 4 தலைப்பின் கீழும், என்றவாறு முப்பால்களிலுமுள்ள 129 அதிகாரங்களில் காணப்படும் இல்லறம், துறவறம், அரசியல், அமைச்சியல், பொதுஜன ஊழியம், களவியல், கற்பியல் ஆகியவை பற்றிய நுட்ப திட்பமான கருத்துக்களைச் சொல்லி விளங்க வைப்பதில் ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார்.

உயர் தனிச் செம்மை சான்ற, தமிழ் நூற்களை பழம் பெரும் நூற்களை ஆய்வதில் ஆசிரியரின் பார்வைக் கோணமும், ஆய்வுப் பணியும், பொதுப்படையாக வரவேற்கத் தக்கவை என்பதே நமது கருத்து.

தமிழ்ப் பண்பு ஒருதலைப்படாத நல நோக்கில் எழுந்துள்ள இத்தகைய நூற்கள் வளர்ந்து வரும் தமிழனுடைய ஜனநாயக சமாதான வாழ்வுக்கு செம்மையும் செழுமையும் ஊட்டும் என்பதில் இரண்டு கருத்திருக்க முடியாது.

தமிழ் மக்கள் யாவரும் இந்நூலைப் படிக்க வாய்ப்பும் வசதியும் கிடைக்க வேண்டுமென்பது நமது அவா. கருத்துப்

பண்பட துடிதுடிக்கும் ஒவ்வொரு தமிழ் மகன் தமிழ் மகள் கையையும் இந்நூல் அணிபெறச் செய்ய வேண்டுமென்பது நமது விருப்பம். மதிப்புமிக்க குறள் ஆராய்ச்சியாளர்கள் இந்நூலைப் பற்றிய தங்களின் மதிப்பீட்டைத் தெரிவிக்க வேண்டுமென்பது நமது பணிவான கோரிக்கை.

இந்த ஆண்டைய வள்ளுவர் விழா சென்ற ஆண்டை விட தமிழர்களிடம் சிறப்பெய்தும் என்பதில் துளியும் ஐயமில்லை. இவ்விழாக் கோலத்தில் இந்நூல் தமிழ்ப் பெருமக்களின் கவனத்திற்கு வரட்டும்.

இறுதியாக ஒரு சொல். இந்நூலின் ஆசிரியர் சாமி சிதம்பரனாரை தமிழுலகம் நன்கறியும். அவர் தமிழ்ப் பேரறிஞர். பன்னூற்களின் ஆசிரியர். அது மட்டுமல்ல அவர் சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாகவே தமிழனுடைய சகல முற்போக்குத் துறைகளிலும் ஈடுபட்டுப் பணி புரிந்து வரும் சிறந்த எழுத்துக் கலைஞர்.

அவர் அண்மையில், ''தொல்காப்பியத் தமிழன்'' ''வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்'' இன்னும் பத்துப் பாட்டு எட்டுத்தொகை பற்றிய ஆய்வு நூற்கள் ஆகிய அரிய படையல்களை தமிழன்னைக்கு காணிக்கை செலுத்தியுள்ளார்.

அவர் நூற்களைப் படித்துப் பயன் பெறுவதுதான் நாம் அவரது கலைத் தொண்டுக்குச் செய்யும் கைமாறாகும். அவர் நன் முயற்சி நீடு வாழ்க!

இந்நூலை வெளியிட்ட ஜனசக்தி பிரசுராலயத்தாரையும் தமிழ் மக்கள் வாழ்த்தி ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

—ஜனசக்தி 1-6-1957

(திரு. சாமி சிதம்பரனார் எழுதிய
'வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்'
என்ற நூலிற்கு ஜீவா எழுதிய
மதிப்புரை

# மகாகவி இக்பால்

(சென்னை நகரை அடுத்த பல்லாவாரத்தில் கலை இலக்கியப் பெருமன்றக் கிளையைத் தொடங்கி வைத்து ஜீவா ஆற்றிய உரையின் சுருக்கம்.)

'புதிய மனிதன்' உருவாகிறான் என்று பேரறிஞர் ஜே. கிருஷ்ணமூர்த்தி அண்மையில் பேசி வருகிறார் பெஸன்ட் அம்மையாரால் உலக குருவாக, ஞான ஒளியாக வளர்க்கப்பட்டவர் இவர்.

உலகம் ஒன்றுபட்டு விட்டது, நாடுகள் வீடுகளாகி விட்டன; ஒரே உலகம், ஒரு உலகம் என்ற கருத்து செல்வாக்குப் பெற்று வருகிறது. உலகின் பல்வேறு அறிவு வளர்ச்சித் துறைகளிலும் ஏற்படும் மகத்தான மாபெரும் முன்னேற்றங்களும் சாதனைகளும் 'புதிய மனிதனை' உருவாக்குகின்றன.

இந்தப் புதிய மனிதனைப் பாரதி பாடினான்; இக்பால் பாடினார்; அனைத்துலக மனிதனை நோக்கி ஓடிய ரவீந்திரநாதர் பாடினார்.

''ஆகச் சிறந்த மனிதனை மனிதனுடைய சக்தி, வல்லமை சாத்தியக் கூறுகள் அனைத்தையும் இனிய முறை ஒருங்கிணைத்து நிற்கும் முழுமை பெற்ற மனிதனைக் காணும் வேட்கை (The Quest for Perfect Man)—, இதுதான் இக்பாலுடைய தத்துவத்தின் திரண்ட நிலை'' என்று அறிஞர் கூறுகின்றனர்.

பிரிவினைக்கு முன் இருந்த இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த மகாகவிகள் மூவர்—தாகூர், இக்பால், பாரதி.

அவர்களில் இக்பால் பேரறிஞர், விஞ்ஞானி, சட்ட நிபுண, ஐன்ஸ்டீன் கண்ட 'தொடர்பு நிலைத் தத்துவம்

பற்றிச் சிறந்த அறிவு பெற்றிருந்தவர்; பன்மொழிப் புலமை மிக்கவர்.

''அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்ற தாயுமானவரின் குரலை எதிரொலித்த இக்பால் குழந்தையின்பிரார்த்தனைஎன்ற ஒருபாடலில்பின்வருமாறு பாடுகிறார். ''என் உள்ளத்தில் உதித்த ஆசையெல்லாம் வேண்டுகோளாக உருவெடுத்து உதட்டில் வருகிறது. இறைவா, என் வாழ்க்கையை ஒரு தீபத்தைப்போல் அமைத்துவிடு! என் வாழ்க்கையின் மூலமாய் உலகிலிருந்து இருளை அகற்றிவிடு! என் பிரகாசத்தால் ஒவ்வோரிடத்திலும் ஒளி உண்டாக்கிவிடு! மலர்களால் பூந்தோட்டத்துக்கு எழில் உண்டாவதைப்போல் என் உயிரால் என் நாட்டுக்கு உயர்வு உண்டாக்கிவிடு! இறைவா, என் வாழ்க்கை ஒரு விட்டிலைப்போல் ஆகட்டும்! அறிவு என்னும் விளக்கை நான் நேசிக்கட்டும். என் பணியெல்லாம் ஏழைகளுக்குத் துணை செய்வதாகவே இருக்கட்டும். துன்புற்றோரையும் வயோதிகரையும் நான் நேசிக்கட்டும்! என் அல்லாவே, என்னைத் தீமையிலிருந்து காப்பாற்றுவாயாக! நேரிய வழியில் என்னை நடத்துவாயாக''

''தொழிலாளிக்கு உற்ற நண்பன், முதலாளிக்குச் சாவுமணி'' என்று குர்ஆனை அவர் வருணித்தார்.

''இக்பாலின் கவிதையானது அதிகாலையிலே ஒட்டகப்பிரயாணிகளை எழுப்பும் மணியோசை ஆகட்டும். எமது மக்களின் பிரயாணக் கூட்டம் மறுபடியும் விழித்து முன்னேறிச் செல்லட்டும்'' என்று பாடிய இக்பால், ''சீனமும் அரேபியாவும் எங்கள் நாடே, இந்துஸ்தானமும் எங்கள் நாடே...உலகெல்லாம் எங்கள் நாடே'' என்று சர்வதேசிய கீதம் இசைத்தார்.

''உலகின் விதியை நிர்ணயிக்கும் நட்சத்திரம்" ஆக மனிதன் திகழ வேண்டுமென்று இக்பால் விரும்பினார். மனிதன், இறைவனின் பிரதிநிதியாக உலகில் ஒளிவிட

வேண்டுமென்று அவர் விரும்பினார். அத்தகைய மனிதன் பூவின் அரும்பினுள் இருக்கும் மணத்தைப் போலச் சிறைப் பட்டிருப்பதை அவர் விரும்பவில்லை, ''பூஞ்சோலையின் தென்றலுடன் கலந்து உலகெங்கும் உனது நல்மணம் கமழும்படிச் செய்துவிடு. இழிவான சிறு அணுவாக இருக்கி றாயே, பெரும் பாலைவனமாக மாறிவிடு! இலேசான இளங்காற்றின் அலையாக இருக்கிறாயே, சக்தி வாய்ந்த பெரும் புயலாகப் பெருகிவிடு! உன் அன்பின் வன்மையி னாலே அற்பப் பொருளையெல்லாம் உயர்ந்ததாகவும் புகழுடையதாகவும் செய்துவிடு'' என்றுஇக்பால்பாடினார். (இறைவன் மறுமொழி என்ற கவிதைத் தொகுப்பு)

குறுகிய தேசீய வெறியை அவர் போற்றவில்லை. ''நாட்டுப் பித்து எனும் தூசியால் அழுக்குப் படாதிருக்கும் தூய ஆடையுடுத்திய மனிதனையே இறைவன் போற்று கிறார். குடியேறிச் சென்ற நாடாகிய எகிப்தையும் பிறந்த கன்ஆன் நாட்டைப்போலவே ஏற்றுக் கொண்ட யூஸப் நபியைப் போன்றவனையே இறைவன் வாழ்த்துகிறார்'' என்று இக்பால் பாடினார்.

முதலாளித்துவ அமைப்பு, உழைக்கும் வர்க்கத்தை நசுக்கிப் பிழிந்த கொடுமையைக் கண்டு உருகிய இக்பால் மனிதனை, சாதாரண மனிதனை, மகத்தான சக்தி களைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் மனிதனைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் அளித்து நம்பிக்கை ஊட்டினார்.

''இந்த உலகு எனும் பூங்காவின் நாசநிலையைக் கண்டு நீ கவலைப் படாதே! விரைவில் இதன் கிளைகளி லிருந்து நட்சத்திரங்களைப் போன்ற பூங்கொத்துக்கள் பிரகாசிக்கும் காலம் வரப் போகிறது. பூந்தோட்டத் திலிருந்து குப்பை கூளங்கள் அகன்றுவிடும் காலம் வரப் போகிறது. வானத்தின் நிறத்தைச் சற்றுக் கண்ணெடுத்துப் பார். அது கருஞ்சிவப்பாயிருக்கிறது. இத்தோற்றமானது பரிதி உதித்து மேலோங்கி வரும் அறிகுறியாகும்.''

"இந்த நூற்றாண்டை இக்பால் தமதாக்கிக் கொண்டு விட்டார். ஆயிரமாயிரவரை அவர் தன்னந்தனியாக வெற்றி கொண்டு விட்டார். நூறு குதிரை வீரர்களின் வல்லமையுடன் வல்லமைமிக்க புலவர் பெரும்படையை அவர் ஓடோடச் செய்து விட்டார். அறைகூவலுக்கும் அழைப்புக்கும் ஈடாக மாபெரும் திறன்கள் படைத்துத் திகழ்ந்த அவர், மற்றவர்களை மிஞ்சி நின்று சிறந்து விட்டார்" என்று இக்பாலைப் பாரசீக மகாகவி பஹார் புகழ்ந்துரைத்துள்ளார்.

"பழைய ஆட்டு மந்தையின் தலைவன் பிளேட்டோ" என்று இக்பால் கூறினார். கவியினுடைய உள்ளம், கலைஞனுடைய உள்ளம் அனிச்சமலரினும் மெல்லியது என்று அவர் கூறினார். "உன்னுள்ளே இறைவனுடைய பண்பை வளர்த்துக்கொள்" என்று மனிதனிடம் கூறினார். களிமண்ணை மனிதனாக்க வேண்டும். அதுதான் கலையின் தொழில் என்று இக்பால் கூறினார். "சமுதாயத்தில் ஒரு மணியாக, ஒரு ஜீவ உறுப்பாகத் திகழ்வாயாக; லட்சியமற்ற புழுதியாகச் சுழலாதே" என்று மனிதனை அவர் கேட்டுக் கொண்டார்.

"இன்றைக்கு உள்ள ரகசிய உள்ளம் எனக்குப் பொருட்டல்ல; வருங்காலத்துக் கவிஞனின் குரலே என்னுடையது" என்று இக்பால் கூறினார். வாழ்வு சதா மாறிக் கொண்டே இருக்கிறது என்று அவர் வலியுறுத்தினார். வாழ்க்கை அமரத்தன்மை உடையது என்பதை அவர் உரத்தக் குரலில் கூறினார்.

மனிதன், பஞ்சணையில் சோம்பேறியாகப் படுத்து உறங்கப் பிறந்தவனல்ல என்று இக்பால் கூறினார். "நீ ராஜாளிப்பறவை; நீ வல்லூறு. உனது விதி, ஓய்வறியாப் போராட்டம் ஆகட்டும்; மேலே மேலே பறந்து செல், இடைவிடாது முன்னேறிச் செல்; வானங்களுக்கு அப்பால் உள்ள வானவெளிகள் உனக்காகக் காத்திருக்கின்றன"

"துஸா ஹீன் ஹைபர்வாஸ் ஹைகாம் தேரா தேரேஸாம்னீ ஆஸ்மான் அவுர் பி ஹைன்') என்று இக்பால் பாடினார்.

இக்பால் கையாண்ட உருது மொழி நடை பாரசீக மொழியின் தத்துவ வளத்தையும் செல்வாக்கையும் கொண்டிருந்தது; அதை உருது மொழி பேசுவோரும் அரிதின் முயன்று படித்தறிய வேண்டியிருந்தது. ஆயினும் அவருடைய கவிதையுள்ளத்தை, அதன் தன்மை நிறைந்த காம்பீர்யத்தை மக்கள் படிப்படியாக உணர்ந்து போற்றத் தொடங்கினர்.

கலையைப் பற்றி, உயர்ந்த கலையைப் பற்றி இக்பால் விரிவாக ஆராய்ந்தார்.

"அன்பு வெறியிலே கலை எனும் நல்லிசை ஊட்டி வளர்க்கப்பட வேண்டும்; ஜீவரத்தத்தில் கரைந்து நிற்கும் நெருப்பாக அது திகழ வேண்டும். பொருள் இல்இசை ஜீவனற்றது. அணையும் நெருப்பில் உள்ள வெம்மையைப் போன்றே அதன் ஆற்றல் இருக்கும். திறன் படைத்த கலைஞன் என்பவன் இயற்கையைத் துருவி அதன் பரம ரகசியங்களை அற்புத அழகுகளை நமது புலன்களுக்குப் புரிய வைப்பவனே அப்போது அவன் ஒரு புதிய உலகத்தைப் படைக்கின்றான். நமது வாழ்க்கைக்கு ஒரு புதிய உயிர்த் தன்மையை அவன் அளிக்கிறான்" என்று இக்பால் கூறினார்.

முர்ராஹ்வா-இ-சுஹ்டை என்ற நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் அவர் மேற்கண்டவாறு கூறுகிறார், "இறைவன் வாழ்கிறார்; மனிதன் வாழ்கிறான். இது எவ்வாறு சாத்தியமாகிறது? இருவரும் சிருஷ்டித் தொழிலை இடைவிடாது செய்துவருகின்றனர். இதுதான் அந்த வினாவுக்கு விடையாகும். ஆம். அத்தொழில் மூலம்தான் இருவரும் வாழ்கின்றனர்" என்று இக்பால் கூறினார்.

படைப்புத் தொழிலில், ஈடுபட்டுள்ள கலைஞன், தனது சூழ்நிலையுடன் இடைவிடாது போராட்டம்

நடத்துகிறான். சூழ்நிலையை வெற்றிகொள்ள அயராது போராடுகிறான். இப் போராட்டம், அவனுடைய ஜீவனுள்ளே இருக்கும் உள்ளார்ந்த சக்திகளை மலர்விக்க அவனுக்குத் துணை செய்கிறது; கலையை உருவாக்கத் துணை செய்கிறது. இப்போராட்டம் அல்லது பரபரப்பு நிலை, அக்கலைஞனுடைய ஆளுமை (Personality)யின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. அதுதான் கலையின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். இவ்வாறாக மனிதனின் பிற நடவடிக்கைகளுக்கு உள்ளது போன்றே கலைக்கும் ஒரு பரிசோதனை வைக்கிறோம். ஆளுமையைச் சுற்றி எழும் கலை முழுமை பெற்றதாகவும் சிறந்ததாகவும் இருக்கிறது. ஆளுமையைச் சிதைக்கும் அல்லது பலவீனப்படுத்த முயலும் கலை நசிவுத் தன்மை கொண்டதாகவும் (Unhealthy) விரும்பத்தகாததாகவும் (Undesirable) அமைகிறது.

கலை கலைக்காகவே என்று பேசும் மேதாவிகளை இக்பால் பாராட்டவில்லை; அந்தக் கூற்றை அவரால் சகிக்கவே முடியவில்லை. "உண்மையான கலை மனித வாழ்க்கை மீது ஆழமான விரைவான முத்திரை கொண்டிருக்க வேண்டும்; கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்தாய், உள்ளுணர்வுகளுக்கு இன்பமும் எழுச்சியும் ஊட்டவல்லதாய் இருக்க வேண்டும். அதே சமயத்தில் மனிதனின் சிந்தனை ஆற்றல் முதலிய மேம்பட்ட துறைகளுக்கு நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழவேண்டும். கலையின் நோக்கம் வாழ்க்கைக்குத் தொண்டாற்றுவதாக, வாழ்க்கையை மேன்மேலும் அழகும் பொலிவும் அமைதி நிறை இன்பமும் சேர்ப்பதாக இருக்கவேண்டும். இன்பமும் மகிழ்ச்சியுந்தருவது மட்டுமே மெய்யான கலை முயற்சிகளின் பணியாக இருக்கக் கூடாது. மெய்யான கலையின் பணி அல்லது தொழில், மனிதனின் உயர்ந்த மெல்லுணர்வுகளைத் தட்டி எழுப்புவதாக அமைய வேண்டும்" கலை பற்றி இக்பால் இத்தகைய கருத்துக்களையே கொண்டிருந்ததை இக்பாலின் தோழரும் அவருடைய கவிதைத்

கலையை நன்கு அனுபவித்து விமர்சித்தவருமான சையிது அப்துல் வாஹித் தமது IQBAL his Art and Thought என்ற நூலில் (John Murray, London, வெளியீடு) விளக்கியுள்ளார்.

படைப்புத் தொழிலில் இறைவனுடன் உயர்ந்த நிலையில் நின்று ஈடுபட்டிருக்கும் சிறந்த கலைஞன் ஒருவன், இறைவனுடைய படைப்பு முயற்சிகளை விடத் தன்னுடைய சிருஷ்டிகள் மேம்பட்ட கலை, தொழில் நுணுக்கங்கள் கொண்டிருப்பதைக் காண்கிறான். இதை இறைவனிடமே அக் கலைஞன் சுட்டிக்காட்டுகிறான். இதை இக்பால் பின்வருமாறு பாடுகிறார்:

''இறைவ, இருள் ஆட்சி செலுத்தும் இரவைப்
படைத்தவன் நீ;
இருள் அகற்றி ஒளிபரப்பும் விளக்கைப் படைத்தவன்
நான்!
களிமண்ணைப் படைத்தவன் நீ;
அழகு சிந்தும் வண்ணக் கிண்ணம்
படைத்தவன் நான்!
பாலை நிலத்தையும் மலைகளையும் காடுகளையும்
படைத்தவன் நீ
பூங்காக்களையும் தோட்டங்களையும் பழமுதிர்ச்
சோலைகளையும் படைத்தவன் நான்!
நீ கல்லைப் படைத்தாய்;
நல்லழகு உணர்த்தும் கண்ணாடியை நான்
படைத்தேன்!
நஞ்சைப் படைத்தவன் நீ என்றிடில்
அதை நல் மூலிகையாக மாற்றியவன் நான்''

நெஞ்சினிக்க, சிந்தனைக்கு விருந்து தரும் இவ்வழகிய கவிதையில் கலையின் லட்சணங்களை இக்பால் மிகத் தெளிவாகக் கூறிவிட்டார்.

''அக நிலையையும் ஆற்றலையும் பற்றிய எத்தனையோ ரகசியங்களை நன்கறிந்தவன் இந்த மனிதன்;

தர்க்கத்தையும் தத்துவத்தையும் நன்கறிந்தவனும் இந்த மனிதன்தான்'' என்று இறைவன் கூறுவதாக இக்பால் கூறுகிறார். அடியார்களையும் இறைவனுடன் சமநிலையில் வைத்துவிட்ட மானிடனை இறைவன் வியந்து பாராட்டு கிறார் என்று இக்பால் பாடுகிறார். மனிதன்பால் இக்பால் கொண்டிருந்த மதிப்பும் நம்பிக்கையும்தான் எத்தகையது!

பழம் பெருமையைப் பேசிக்கொண்டு வெறியூட்டி அலையும் கூட்டத்ினரை ''மூதாதையரின் புதை குழிகளை விற்றுச் சாப்பிடுவோர்'' என்று இக்பால் சாடுகிறார். புதியன கண்டுபிடித்தல், இலக்கிய ஆராய்ச்சி, மூதாதையினருக்கு இழிவு வராமல் பாதுகாத்தல் ஆகியவற்றை விட்டு நம்பிக்கை இழந்து தோல்வி மனப் பான்மையுடன் 'நாளை, நாளை' என எதிர் பார்த் திருக்கும் செயலற்றசோம்பேறிகளை இக்பால் வெறுத்தார்.

''நோன்பின் துன்பங்களைச் சகித்து, இறைவனை மனமார நேசித்து, திமிர்பிடித்த பணக்காரச் சாதியின் குற்றங்குறைகளை மறைத்து அவர்களுடைய மானத்தைக் காக்கும் ஏழைகளால்தான், உழைக்கும் மக்களால்தான் உலகில் அறம் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறது' என்று இக்பால் பாடினார்.

மிகச் சிறந்த எழுமீன் கூட்டம் போன்ற உயர்ச்சியை மனிதன் தனது இருப்பிடமாக்கிக் கொள்ள வேண்டுமென்று இக்பால் விரும்பினார்.

மகாகவி இக்பால், தான் வாழ்ந்த காலத்தில் உலகின் மேற்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற மகத்தான மாறுதல் களை மிக நுணுக்கமாகப் பரிசீலித்து வந்தார். சோவியத் ருஷ்யாவின் மகத்தான தோற்றத்தையும் அது உணர்த் தும் மாபெரும் உண்மைகளையும் நன்கறிந்தவர் இக்பால். சோவியத் நாட்டில் புதியதொரு சமுதாயம் மலர்ச்சி பெற்று வருவதை அவர் மிக நுட்மாகப் புரிந்து கொண் டார். தன் நெஞ்சத்துக்கு உடன்பாடான புதிய சமுதாயச்

கருத்துக்கள் அங்கு உருவம் பெற்று வருவதை அவர் கண்டார். அந்த மகத்தான சமுதாய எழுச்சியை முஸ்லிம் உலகுக்கு உணர்த்த அவர் விருப்பினார்.

அந்த நிலையில் 'லெனின்' தேவ கன்னிகளின் பாட்டு, இறைவனின் 'கட்டளை' என்ற முப்பெரும் பாடல் (Trilogy) உருவாயிற்று. இதில் இக்பாலின் கலை, உலகு தழுவிய அம்சங்களைப் பெறுகிறது.

லெனின் வாழ்ந்த நாளில் கடவுளை நம்பியறியாதவர்; அவர் ஒரு நாஸ்திகர் அவர் சோவியத் வாழ்வின் மூலவர். மனித வர்க்கத்தின் கணிசமான ஒரு பகுதி மக்கள் சிறந்த நல்வாழ்வு பெற புதிய சமுதாயத்தைக் கண்டவர். லெனின் படைத்த வாழ்க்கை அமைப்பில் அடிமை இல்லை, ஆண்டான் இல்லை, சுரண்டல் இல்லை. கொடுமை சூது இல்லை, எல்லோருக்கும் சம உரிமை, சமவாய்ப்பு அளிக்கப் படுகிறது. மகாகவி இக்பால் இந்த வாழ்வை நேரிலும் காண்கிறார்; உணர்ச்சிப் பெருக்கடைகிறார். இஸ்லாமிய உலகம், இந்த நல்வாழ்வை ஒப்பி வாழவேண்டுமென்று விரும்புகிறார். எனவே நாஸ்திகரான லெனினைத் திடீரென்று ஆண்டவனை எதிர்ப்பட வைக்கிறார். லெனினைப் பல கேள்விகள் எழுப்பவைக்கிறார். ஆண்டவன் வாய் மொழியாக ஆண்டவன் பதிலாக புதிய சமுதாயக் கருத்துக் களை இஸ்லாமிய உலகுக்கு எட்டச் செய்கிறார்.

இக்கவிதையின் நடை (Style) மரபுவழி வெளியீட்டு முறை (Classic) க்கு ஒத்தது. எடுத்தாண்டக்கு பொருள் அதீதக் கற்பனை (Romantic) வகைப்பட்டது. லெனின் பேச்சு துருவி ஆராய்ந்து எதையோ தெரிந்து கொள்ளத் துடிக்கும் நிலையை வெளிப்படுத்துகிறது. அவருடைய பாத்திரப் படைப்பு அதீதக் கற்பனையே, தேவகன்னிகளின் 'கோரஸ்' ஓசை நயமும் எதுகை மோனைச் சிறப்பும் பெற்றிருக்கின்றன. உயிரின் ஆழத்திலிருந்து பிறக்கும் நாதவடிவின் பெருமைகளை அந்த இசையில் காண்கிறோம். இறைவனின் கட்டளை, மிகுந்த உணர்ச்சிக் கட்டுப்பாட்டுடன், ஆழ்ந்த குரலில் வெளிப்படுகிறது; அதில் பரம்பொருளின்

காம்பீர்யத்தையும் பெருமிதத்தையும் இக்பால் கொண்டு நிறுத்துகிறார் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

## லெனின் கேள்வி

முதலில் இறைவனிடம் லெனின் பின்வருமாறு கூறுகிறார்:

"வாழ்விலும் இயற்கையிலும் உனது குறியீடுகள் ஒருமையை உணர்த்துவன; ஆதியும் அந்தமும் இல்லாதவன் நீ என்கிறார் உனை; என்றும் வாழ்கிறாய் என்கிறார் உனை; ஆயின் நீ நிலைபெற்றிருப்பதை யான் அறிவதெங்ஙனம்? மேதையர் தம் கருத்துக்கள் நாளும் மாறுகின்றனவே, இன்று நான் கண்ணெதிரே காண்கிறேன் உனை. இப்போதும் திருச்சபையின் கட்டளைக் கருத்தே என் கவனத்திற்கு வருகிறது....

'உன் அனுமதியுடன் ஒரு வினா எழுப்ப விரும்புவேன் யான், ஆண்டவனே இவ்வினாவுக்கு வேதாந்தியின் பெருநூல் ஏதும் விடை தரவில்லை! நீ யாருக்கு இறைவன்? வானங்களினடியில் வதியும் களிமண்ணால் ஆன மனிதனுக்கு இறைவனா நீ? யாருக்கு இறைமை உணர்த்தி நிற்கின்றாய் நீ...?

"கீழைய நாடுகளுக்கு கடவுளர் ஐரோப்பிய வெள்ளையர்; மேலைய நாடுகளுக்கோவெனில் ஒளிவிடும் டாலர்களே இறைவராம்! இந்த ஞானம், இந்த அறிவு, இந்த ஆட்சித் திறம், இந்த ராஜாங்க அமைப்புத்திறம் அனைத்தும் கொண்டு அவர்கள் குடிப்பதோ ரத்தம். ஆயின் அவர் தம் சமத்துவப் பேச்சில் குறைச்சல் இல்லை! முகங்களில் மாலைப் போதில் காணும் செந்நிறத் திரட்சி வண்ணப் பூச்சுகளின் விளைவு; அல்லது மது ஊறித் ததும்பும் நிலையின் காட்சி...

"இருக்கட்டும். நீ இறைவன், சர்வ வல்லமை நிறைந்தவன் நீ; நீதியின் தேவன் நீ! ஆயின் உனது உலகில் துரதிர்ஷ்டம் மிக்க தொழிலாளியின்நிலையோபடுமோசம்;

மிகமோசம்! முதலாளித்துவப் படகு மோதிச் சிதறுவது எப்போது? உனது உலகம் காத்திருக்கிறது; கணக்குத்—தீர்க்கும் நாளை—மீட்சி பெறும் நாளை எதிர்நோக்கி—பொறுமையிழந்து காத்திருக்கிறது."

## தேவகன்னிகள் சாட்சியம்

லெனினது தெளிவான, நேருக்கு நேரான சுரீரெனதைக்கும் இச்சொற்கள் தேவகன்னிகளை உருக்கி விடுகிறது. அவர்கள் சேர்ந்து பாடுகின்றனர். இறைவனுடைய உலகின் நிலையை அவர்கள் விளக்குகின்றனர்.

"நல்லறிவு இன்னும் கட்டுப்பட்டே இருக்கிறது. அன்பும் அருளும் நிலை பெறவில்லை, ஓ, தெய்வீக ஓவியனே, (இறைவா) உனது ஓவியத்தில் இன்னும் குறை ஏதோ காண்கிறது. உனது ஓவியம் மறைவிடத்தே கேட்பாரற்றுக் கிடக்கிறது. கேளிக்கைக்காரனும், உன் பெயரால் எத்திப் பிழைப்பவனும், தலைவன் என்போனும், சந்நியாசியும் உலவியே வருகின்றனர், உனது பிரபஞ்சத்தில் சமரச நிலையைக் காணோம். ஏற்றத் தாழ்வுகள் மலிந்த பழைய ஏற்பாடு இன்னும் நீடித்தே வருகிறது."

## இறைவன் கட்டளை

தேவகன்னிகளின் இப்பாடல் சர்வேசுவரனைக் கிளர்ச்சியடையச் செய்கிறது. ஆழ்ந்த குரலில், காம்பீர்யம் மிக்க உறுதியுடன் அவர் பேசுகிறார். பாடுபட்டுப் பயிர் வளர்த்துக் காத்து அறுவடை செய்பவனுக்குப் பயன்படாத தானிய மணிகள் அனைத்துக்கும் நெருப்பிடுமாறு வானவர்களுக்கு இறைவன் ஆணை இடுகிறார்.

"எனது உலகின் ஏழை எளியோரைத் தட்டி எழுப்புவீராக! ஆதிக்கக்காரர்களுடைய அரண்மனைகளின் அஸ்திவாரங்களை உலுக்கிச் சிதையுங்கள். அடிமைகளின் ரத்தத்தில் சூடேற்றுங்கள்! வல்லூறை எதிர்த்துப் போராடும் ஆற்றலைச் சிட்டுக்கு அளியுங்கள்! உழுபவனுக்கு

உணவாகப் பயன்படாத தானியக் கதிர்மணிகள் அனைத்தையும் நெருப்பில் இடுங்கள்! நவீன நாகரிகம் ஊதுலையாகவே நிற்கிறது. கிழக்கு நாட்டில் கவிஞனுக்கு (இக்பாலுக்கு) ஆவேசம் அருளுங்கள். அவன் பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திடட்டும்!"

இவ்வாறாகத் தன் சொல்லை நின்றுகேட்கத் தயங்கிய இஸ்லாமியர்களுக்கு இறைவன் வாயிலாகப் புதிய சமூக நீதியை இக்பால் உணர்த்தினார்.

—தாமரை அக். 62

## சாமி சிதம்பரனார்

சாமி சிதம்பரனார் பழுத்த தமிழ்ப் புலவர். தமிழ் நாட்டு முதல் வரிசை முற்போக்கு எழுத்தாளர், தமிழால் தமக்கும், தம்மால் தமிழுக்கும் பெருமை ஏற்பட வாழ்ந்த அறிஞர்.

'தாமரை' பிறந்ததிலிருந்து, சென்ற பொங்கல் மலர் வரையில் தமது கட்டுரைகளால் அதன் இதழ்களை அதிகமாக அணி பெறச் செய்த எழுத்துக் கலைஞர் சிதம்பரனார் தான். அந்தத் தமிழ் வள்ளலின் நேர்முகமான அருட் கொடை இனி 'தாமரைக்குக்' கிடையாது—

சென்ற மாதம் சிதம்பரனார் மறைந்தார்; தமிழக முற்போக்கு எழுத்தாளர் உலகத்தை ஈடு செய்ய முடியாத நஷ்டத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்தார்.

## தமிழ்ச் சித்தர்

சிதம்பரனார் 'தாமரை' வாசகர்களுக்கு—நமக்கு— அருளிய இறுதிக் கட்டுரை 'விஞ்ஞானங் கண்ட சித்தர்கள்' என்பதாகும். அந்தக் கட்டுரையில், சித்தர்கள், மனித சமுதாயத்தின் கவலையைப் போக்குவதற்கான பல உண்மைகளைக் கண்டு பிடித்தவர்கள் என்றும், உலகமும் உடம்பும் மெய் என்று கண்ட உலகாயதர்களென்றும், சாதி, மத, இன, மொழி வேற்றுமைகளைத் தாண்டி, மனித குலத்தை நேசித்த சான்றோர்களென்றும் அவர்களை அறி முகப்படுத்தி வைக்கிறார்.

சிதம்பரனாரும், மனித குலத்தை நேசித்து, நமது தமிழ்ப் பெரியார்கள் கண்ட சிறந்த உண்மைகளையெல் லாம் 'பழகு தமிழில்' தமிழனுக்கு அருளிய ஒரு தமிழ்ச் சித்தர்தானே? தொல்காப்பியத் தமிழனிலிருந்து பாரதித் தமிழன் வரையில், ஏன் இன்றையத் தமிழன் வரையில்

வாழ்ந்து கண்டவைகளையும் வாழக் கண்டவைகளையும் அவருடைய புரிதல்-தெரிதல் வழியில் அவருடைய அலாதிப் பாணியில் வழங்கியுள்ளார் அல்லவா?

## அர்ப்பணித்த வாழ்வு

சாமி சிதம்பரனார், தமது அறுபத்தொரு ஆண்டுகளில், தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் 40 ஆண்டுகளுக்கு மேலாகவே அர்ப்பணித்தவர்.

சிறந்த புலவர்களிடம் பயின்று, சிதம்பரனார் தக்க தமிழ்ப் புலவராகத் தேறினார். பின்னர் தஞ்சை மாவட்டத்தில் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். அந்த நாளில் "தமிழ் அய்யாக்கள் பள்ளிகளில் நன்மதிப்படைவது" அபூர்வ வரலாறு. ஆனால் சிதம்பரனாரோ அபூர்வங்களில் ஒரு அபூர்வமாக விளங்கினார். புதுமுறையில் பயிற்றுவித்தும் மாணவர்க்குரிய புத்தகங்கள்பல எழுதியும், மாணவர் உலகத்தின் போற்றுதலுக்கு இலாக்காகினார். அந்தக் காலத்தில் சீர்திருத்தக் கருத்துக்கள் அவர் எண்ணத்தில் முளைத்துத் தழைத்தன.

சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் ஏறுமுகமாயிருந்த ஆரம்ப ஆண்டுகளில் கைவல்ய சாமியாரை விட்டால், 'குடியரசு இதழில்' தொடர் கட்டுரை எழுதி வந்த முக்கியமான இரண்டு மூன்று எழுத்தாளர்களில் சிதம்பரனாரும் ஒருவர். பண்டிதரின் எளிய தமிழ் என்பது அவர் நடைக்குரிய தனிச் சிறப்பு.

## சீர்திருத்த வீரர்

"துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்" என்று தமிழர் தலைவர் வ. உ. சி யின் குட்டிக் குறளான "மெய்யறம்" சீர்திருத்தம் பேசுகிறது. துணிச்சல் மிக்க இளைஞரும் புலவருமான சிதம்பரனாரிடம் சீர்திருத்த உணர்வு, நடைமுறைக் கூர்மை அடைந்தது. சாமி சிதம்

பரனார் விதவை மணத்தில் குதித்து சிவகாமிசிதம்பரனார் ஆனார்.

சீர்திருத்த இயக்கமாக இருந்த சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கமாக வளர்ந்து பரந்து வேகங்கொண்ட காலத்தில், சிற் சில புலவரேறுகள் மாதிரி சிதம்பரனார் பின்னடிக்கவில்லை. முன்னணி வீரராகவே விளங்கினார்.

## துணிச்சல்மிக்க பகுத்தறிவுவாதி

காந்தியடிகளின் 'மகாத்மியம்' சுயமரியாதைக்காரர் களால் 'தவிடுபொடியாகி'க் கொண்டிருந்த காலம், மகாத்மா காந்தி, திரு காந்தியாக சு. ம கண்ணோட்டத் தில் 'இறங்கி'விட்ட காலம். 'காந்தி சொல்லோ கடவுள் சொல்லோ எதுவானாலும் பகுத்தறிவுக்குப் பொருத்த மில்லாவிட்டால் தூக்கி எறியப்பட வேண்டியதுதான்' என்ற பகுத்தறிவு முழக்கம் விண்முட்ட செவிடுபட்ட காலம்.

1930-ல் தேசமெங்கும் உப்புச் சத்தியாகிரகம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஈரோட்டில் இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாடு நடந்தது. திரு. ஆர்.கே. சண்முகனார் தமது தலைமைப் பேச்சில் ஈ.வே.ரா.வைக் குறிப்பிடும்பொழுது பெரியார் ''ஈ வே. ராமசாமி'' என்று குறிப்பிட்டார். உடனே ''பெரியாரை வாபஸ் வாங்குங்கள்! பெரிய ஆறாவது சின்ன ஆறாவது!' என்று மேடை மீதிருந்த ஒரு சில இளைஞர்களிடமிருந்து கூச்சல் கிளம் பிற்று. அந்தச் சிலரில் ஒருவர், சாமி சிதம்பரனார். மற்றவர்கள் அய்யாமுத்து, ஜீவா, மணவை திருமலைசாமி போன்றவர்கள் ''காந்திக்கு 'மகாத்மா' வேண்டாம், 'திரு' போதும் என்றால், ஈ.வே. ராவுக்கும் 'திரு' போதுமே பெரியார் எதற்கு?'' என்பதுதான் பகுத்தறிவுப் பாய்ச்சலில் நின்ற அந்த இளைஞர்களின் ஆட்சேபனை.

துணிச்சல், மேலும் துணிச்சல், மென்மேலும் துணிச்சல் என்ற பதாகை ஏந்தி, பிரெஞ்சு நாட்டுக் கலைக் களஞ்சிய வாதிகள் போன்று போராடினார் அந்நாளில்சிதம்பரனார். சிந்தனைச் செல்வரான சிதம்பரனார், தமது அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு, அந்நாளில் நடந்த பகுத்தறிவுக் கிளர்ச்சிகளையும் சுயமரியாதை ஏடு களையும் செழுமை செய்தார்; அவர் கூர் ஏறிய ஒரு குட்டி பூர்ஷுவா பகுத்தறிவு வாதியாக விளங்கினார்

## கட்சிக்காரர் அல்ல-ஏன்?

பின்னர், சுயமரியாதை இயக்கத்தில் சமதர்மக் கருத் தோட்டம் மேலோங்கி வந்த காலத்தில் சிங்கார வேலரின் சமதர்மப் போக்கைவிட, எஸ். ராமநாதனின் அறிவு முதல் வாதப் (Rationalism) போக்கிலேயே சிதம்பரனாரின் மனச் சாய்வு சென்றது. ஆரம்பகால நீதிக் கட்சி உறவும், ராம நாதரின் அழுத்தமான தொடர்பும், ஈ. வே. ராவின் சாதனைகளில் ஏற்பட்ட ஒரு வகை மதிப்பும் சுயமரியாதை சமதர்மிகள்-காங்கிரஸ் சோஷலிஸ்டுகளிடம் கண்ட போராட்ட நேர்மையில் எழுந்த நல்லெண்ணமும், அவ ரிடம் இயல்பாகவே பொதிந்து கிடந்த சமுதாய நீதிக்குப் போராடும் போராட்ட மனப்பான்மையும், இணைந்தும் பிரிந்தும் சிதம்பரனாரின் வாழ்வில் சில பல வெளியீடு களைக காட்டின. தமிழகத்தின் சிறந்த புதல்வர்களில் ஒருவராக வாழ்ந்த சிதம்பரனாரிடம் நாம் கருத்து மாறு பாடு காணலாம். ஆனால் தமிழகத்திற்கு அவர் புரிந்த பணியில் நேர்மைக் குறைபாடு காண முடியாது.

## எல்லாரும் வணங்குவர்

இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் அவர் காட்டிய மன உறுதி தமிழகத்தின் முற்போக்கு எழுத்தாளர் அணியில் அவர் பெற்றிருந்த பெருமைக்குரிய இடம், ஆரம்ப காலத்திலிருந்தே சமாதான இயக்கத்தில் அவர்

முன்னணி வீரராக நின்ற நிலை, கம்யூனிஸ்டுக் கட்சி அக்கினிப் பரீட்சையில் இறங்கி நின்ற காலங்களில் வெளிப் படையாக அவர் காட்டிய நட்புறவு, வாழ்நாள் இறுதிவரை யில் அவருக்கு சமதர்மக் கோட்பாடுகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சியினிடமும் இருந்த பெருமதிப்பு—இவற்றை நினைத் தால் வளரும் புதிய தமிழகத்தின் உண்மை ஜனநாயக வாதி ஒவ்வொருவனுக்கும் மெய்சிலிர்க்கும், கண் கலங்கும், 'தாமரை'யோடு அணிவகுத்து நின்று, அவருக்கு இறுதி வணக்கமும் அவர் குடும்பத்தார்க்கு மனப்பூர்வமான அனுதாபமும் செலுத்துவான் என்பதில் சந்தேகமில்லை.

## எழுத்துப் பணிக்கு எடுத்துக்காட்டு

பழைய இலக்கியங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டும்; அவற்றிற்கு அடிமையாகக் கூடாது, கால சக்திக்கு குரல் கொடுக்கும் புதிய இலக்கியங்களைப் படைத்துக் குவிக்க வேண்டும். இந்தத் திசைவழியில், இன்றையத் தமிழக எழுத்துக் கலைஞர்களுக்கு, சிதம்பர னார் ஒரு நல்ல எடுத்துக் காட்டாக விளங்கினார் என்பது என் கருத்து.

எழுத்தாளன், தனது படிப்புச் செருக்கு ஆர்ப்பாட்ட மாக வெளிச்சம் போட எழுதக் கூடாது; மக்களுக்காக எழுதவேண்டும். இதுதான் இந்த ஜனநாயகத்தில் எழுத்துக் கலையின் முதல் சூத்திரம். சிதம்பரனார் இந்த சூத்தி ரத்தை கடைப்பிடித்து எழுத்துப்பணி புரிந்தார் என்பதை அவருடைய நூல்களே பறைசாற்றிச் சொல்லும்.

## 'வள்ளலார் வரலாறு'

இந்நூல் சுயமரியாதை இயக்கம் சாதி, மத, சமூகத் துறைகளில் முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பிய காலத் தில் சிதம்பரனாரால் எழுதப்பட்ட நூல்.

சென்ற நூற்றாண்டின் நடுக்கண்டத்தில் தமிழகத்தில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க அடிகள், சமயப் போர்வை யில் நடமாடிய பெருஞ் சீர்திருத்தவாதி, வேதாந்த கேசரி விவேகானந்தவடிகளைப் போன்றவரே நமது சமரஸ சன்

மார்க்க வள்ளலாரும். கனிவில் வாதவூராடிகளின் வாரிசாக நின்று, 'அருட்பா' அருளியவர் இராமலிங்கஸ்வாமிகள், அருட்பாவின் ஆறாம் திருமுறையும், விவேகானந்தரின். "கொழும்பிலிருந்து அல்மோராவரை' என்ற பேச்சுத் தொகுப்பும், ஒரே ஆதார சுருதியில் பேசுகின்றன. நாட்டார் நலனுக்கு வேண்டிய சீர்திருத்தங்களையே முழங்குகின்றன.

சிதம்பரனார் தமது நூலில் வள்ளலாரின் கருத்துக் களை தமிழ் மக்களின் சமூக முன்னேற்ற இயக்கத்திற்கு தாராளமாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

## 'தமிழர் தலைவர் ஈ.வே.ரா'

இது பெரியார் ஈ.வே. ராவின் விரிவான வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல். அன்று தமிழகத்தில் நிலவிய பல்வேறு கருத்தோட்டங்களைப் பற்றிய சிதம்பரனாரின் எதிரொலிகளை இதில் காணலாம்.

## சுதந்திர-பிற்கால இலக்கியம்

சுதந்திர-பிற்காலம், படிப்பில், சிந்தனை ஓட்டத்தில், மதிப்பீட்டில், அடிப்படை மாறுதலைத் தூண்டும் ஒரு மகத்தான சூழ்நிலையை நமக்குத் தந்தது. எழுத்துக் கலைஞர்கள் காலத்திற்கேற்றபடி மக்கள் எண்ணத்தை உருவாக்கக் கடமைப்பட்டவர்கள்.

வெண்ணெயின் தன்மைதான் பாலின் தரத்தை நிர்ணயிக்கும், பண்பாட்டின் தர உயர்வுதான் சமுதாய வாழ்வின் தர உயர்வைக் காட்டும். காலங்கண்ட நமது சிறந்த பண்பாட்டில் உலகோடிணைந்த இன்றைய நமது நவீன வாழ்வைத் தோய்த்தெடுக்க இடையறாது முயல வேண்டியது கலைஞர்களின் முதற்பணி. சிதம்பரனா ரும் இந்தத் திசையில் திரும்பினார். விளைவாக, பாரதி உச்சிமேல் வைத்து மெச்சிய கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய முப்பெரும் புலவர்களின் படையல்களை யும், சங்க இலக்கியங்களான, தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றையும் தமிழ்ப்பெரு

மக்களுக்கு மக்கள் நலக் கண்ணோட்டத்துடன் விளக்க மாக அறிமுகப்படுத்தி வைக்கும் பெரும் பணியில் சிதம்பர னார் இறங்கினார்.

'கம்பன் கண்ட தமிழகம்', 'வள்ளுவர் வாழ்ந்த தமிழ் கம்', 'தொல்காப்பியத் தமிழன்', 'பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும்'' 'எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்' முதலிய சிறந்த நூற்களை உருவாக்கி தமிழன்னைக்கு அவர் காணிக்கை செலுத்தியிருக்கிறார்.

## கம்பன்கண்ட தமிழகம்

சிதம்பரனாரின் முதற் பெரும் இலக்கிய நூல் இது. ஜீவா காரைக்குடி கம்பன் விழாவில் 'கம்பன் கண்ட தமி ழகம்' என்ற பொருள் பற்றிப் பேசினார். பழமை வாதி களையும், புதுமைவாதிகளையும் ஒருப்போல சிந்திக்க வைத்த அந்தப் பேச்சு பின்னர் புத்தக வடிவில் வெளி வந்தது. கம்பன் எதிரிகள் ஜீவாவின் அந்தப் பேச்சுக் காக, அவரைத் தமிழகம் எங்கும் ''புதிய பாகவதர்' என்று ஏசித் திரிந்தார்கள். அந்தச் சிறிய நூல் வெளிவந்த சில மாதங்களுக்கெல்லாம் அதே பெயரில் சிதம்பரனாரின் 'கம்பன் கண்ட தமிழகம்' வெளிவந்தது.

தமிழனின் சிறந்த பணபாட்டுக் களஞ்சியம் – ஆக உயர்ந்த இலக்கியக் கருவூலம்—தேசியப் பிதிரார்ச்சிதம கம்பன் காப்பியம் என்று விளக்கிக் காட்டுகிறார், கம்பன் தமிழ்த்துரோகி, ஆரிய அடிமை என்பன போன்ற குறு கிய இனவெறிக் கூற்றுக்களையெல்லாம் இனித் தூள் தூளாக்க முடியாதபடி பொடி சூர்ணம் ஆக்குகிறார் இந்த நூலில். தமிழில் கம்பனின், வணக்கத்திற்குரிய இடத்தைக் காணவும் ஒளி காட்டி வழி காட்டுகிறார், இதில்.

இன்றைய இலக்கிய இயக்கத்தில் எழுந்துள்ள பல சூடேறிய கேள்விகளுக்குப் பதில் சொல்லும் அற்புதமான நூல் இது.

## ''வள்ளுவன் வாழ்ந்த தமிழகம்''

''நிலத்தில் கிடந்தமை கால் காட்டும், காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்''

இந்த குறட்பா காட்டும் வெளிச்சத்தில், வள்ளுவன் வாய்மொழியின் மூலம்; அவன் வாழ்ந்த, தமிழ் சமுதாயங் கண்ட சிறந்த பண்பாட்டை, 'வள்ளுவன் வாழ்ந்த தமிழகம்' என்ற நூலின் வழி சிதம்பரனார் நமக்கு அறிவுறுத்துகிறார்.

திருக்குறளைப் பற்றிய பல்வேறு அம்சங்களையும் சராசரித் தமிழ்-மகன் அறிந்துகொள்ளும் விதத்தில் இந்த நூலில் எளிமைபடச் சொல்கிறார்; மனக்கோட்டமில்லாமல் வள்ளுவத்தைக் கற்க இதில் வழி காட்டுகிறார். திருக்குறளைப் பற்றிப் பரவி நிற்கும்—பரப்பப்படும் குறுகிய மொழி, இன வெறிக்கொள்கைகளை, வரலாற்று நோக்கோடும் தெளிந்த இலக்கிய அறிவோடும் பிட்டுப் பிட்டுக் காட்டி அம்பலப்படுத்துகிறார்.

திறனாய்வால் சிதம்பரனார் கண்டுசொல்லும் கருத்துக்களில் சில பலவற்றை நேர்மையான அறிஞர்கள் ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும், அவை, அவர்களுடைய சிந்தனையைக் கிண்டிக் கிளறிவிடும் வண்ணம் விளங்குகின்றன. இதுவரை வெளிவந்துள்ள, திருக்குறளைப் பற்றிய ஆய்வு நூல்களில் 'வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்' என்ற நூலுக்கு ஒரு தனியிடம் உண்டு என்பது எனது துணிபு.

சிலப்பதிகாரம் இந்த நெஞ்சை அள்ளும் காப்பியத்தை ஆய்வதிலும் முன் காட்டிய பாணியைத்தான் கடைப்பிடித்திருக்கிறார். இந்த நூலும், அந்த நாளையத் தமிழ் மக்களின் வாழ்வைத் தெரியவும், நமது பண்பாட்டை உள்ளது, உள்ளபடி அறியவும் உதவுகிறது.

## தொல்காப்பியத் தமிழர்

தமிழ்ப்பற்றும், தமிழ் அறிவும் என்றுமில்லாதபடி வளர்ந்துள்ள இன்று, ஒப்பற்ற, பழம்பெரும் இலக்கண

நூலான தொல்காப்பியத்திற்கு, சங்க இலக்கியங்களுக்கும் தமிழனின் உள்ளத்தில் மேலான இடம் கிடைத்திருக்கிறது- தமிழனின் இந்த நல்ல எண்ணத்தில் உண்மை ஒளி பாய்ச்ச நினைக்கிறார் சிதம்பரனார். இந்த முயற்சியில் பிறந்ததுதான் ''தொல்காப்பியத் தமிழன்'' என்ற சிறந்த நூல்.

பொருளதிகாரத்தைப் பிழிந்தெடுத்து, அன்றைய உண்மைத் தமிழனை, இன்றையத் தமிழ் மக்கள் முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். பழைமை என்று பாவனை பேசுகிறவர்களுக்கு நல்ல சூடு. பழைமை என்ற அபினி மயக்கத்தில் தடுமாறியவர்களுக்கு நல்ல தெளிவு-நல்ல வெளிச்சம். சிதம்பரனாரின் மிகச் சிறந்த சாதனை இந் நூல்.

## ''பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும''

''பத்துப் பாட்டுக் காலத்தில் தமிழ்நாடு இருந்த நிலைமை; தமிழர்களின் வாழ்க்கை நிலைமை; அரசியல் நிலைமை; சமுதாய நிலைமை, பழக்க வழக்கங்கள்; சிறந்த பண்புகள்; ஆகியவைகளை எடுத்துக் காட்டுவதே இந்நூலின் நோக்கம்'' என்று சிதம்பரனாரே தமது முன்னுரையில் கூறுகிறார்.

பண்டையத் தமிழர் நாகரிக எதார்த்த பார்வையோடு விளக்கிக் காட்டும் ஒளி விளக்கு பத்துப்பாட்டு. திருமுருகாற்றுப் படை தொடங்கி, மலைபடுகடாம் வரையிலுள்ள பத்துப் பாட்டுகளையும் படித்தால், அவற்றில் காணக் கிடக்கும் அழகிய சொல்லோவியங்கள், அன்றைய இயற்கைச் செல்வங்கள், வாழ்க்கைச் செல்வங்களையெல்லாம், நமக்குக் கணகூடாகக் காட்டும்.

இந்த நூலைப்பற்றி சிதம்பரனார் தமது நூலில், தமக்குரிய தனிப்பாணியில் பேசி முன்னுரையில் கூறியுள்ள நோக்கத்தை நிறைவேற்றுகிறார்.

''எட்டுத் தொகையும்தமிழர் பண்பாடும்' என்ற சிதம்பரனாரின் நூலும் இப்படித்தான் தமிழர் பண்பாட்டைத் தோண்டித் தோண்டி எடுத்துக் காட்டுகிறது. வரலாற்று நோக்கோடு உறுதியான அடிப்படையில் நின்று கொண்டு, பண்டைய வாழ்வையும் பழைய நூல்களையும் பற்றிய போலி சோடனைக் கருத்துக்களையெல்லாம் சந்திக்குக் கொண்டுவந்து குட்டை உடைக்கிறது.

சங்க காலத்தை அடுத்து வெளி வந்த நூல்கள் தாம் பதினெண்கீழ்க் கணக்கு அந்த பதினெட்டு நூல்களில் ஒன்றான முப்பா[illegible] [illegible]னியாக ஒரு நூல் எழுதிய [illegible] [illegible]ழக்கணக்கு பற்றியும் ஒரு ஆய்[illegible] [illegible]துயுளளார.

## சாதிக்காத சாதனை

வையாபுரிப்பிள்ளை—தமிழின் ஆராய்ச்சி மன்னன்—டி. கே. சி—தமிழின் ரசிகமணி! இந்த இரண்டு தமிழ்ப் பெரியார்களுடைய சாதனைகளையும் தமிழன் என்றென்றும் நன்றியறிதலுடன் நினைப்பான் என்பதில் ஐயமில்லை. அவர்கள் காலத்திலேயே அவர்கள் தக்க செல்வாக்குப் பெற்றுவிட்டார்கள்!

ஆனால் சாமிசிதம்பரனாரின் சாதனை என்ன? தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் என்ற தமிழ் மொழியின் ஆகச் சிறந்த இலக்கியங்களை சாதாரண மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் நோக்கோடு ஆய்ந்து, சிறந்த நூல்களை வரிசையாகத் தீட்டித் தந்த சாதனையாகும். இந்தச் சாதனை, இதுவரை யாரும் சாதிக்காத பெரும் சாதனை! இதை போகப்போக தமிழன் உணர்வான் என்பதில் ஐயமில்லை.

## புதிய இலக்கியப் பணி

இதுமட்டுமல்ல, 'சரஸ்வதி', 'தாமரை' போன்ற இலக்கிய ஏடுகளில் சிதம்பரனார் எழுதிய பலப்பல கட்டுரைகள், அவர் தமிழின் புதிய இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணியையும் பலப்படுத்தும்.

''இலக்கியங்கள் ஏன்?'', 'வசன இலக்கியம் வளர்ந்த விதம்'' ''சிறுகதைஇலக்கியம்', 'புலவர்கள் யார்?' 'தமிழும் வடமொழியும்', 'கிணற்றுத் தவளைப் புலவர்கள்' 'பின்னோக்கிச் 'செல்லும் பெரியோர்கள்' போன்ற மேற்குறிப்பிட்ட ஏடுகளில் வந்த கட்டுரைகளைப் படித்தால் சிதம்பரனாரின் முற்போக்கு உணர்வு விளங்கும்; அவருடைய அபூர்வப் பாத்திரமும் புலப்படும்.

**வாழ்க சாமி சிதம்பரனார் நாமம்!**

—'தாமரை' பிப். 1961

★ ★ ★

## தமிழ்த்துறை நூல்கள்

சென்னை, மனோன்மணீயம் சுந்தரனார், பாரதியார், பாரதிதாசன், மதுரைக் காமராசர், அண்ணாமலை, பாண்டிச்சேரி, வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகங்களுக்கு உரியன :

**ப. முருகன்**

| | |
|---|---|
| *வள்ளுவம் பன்னோக்குப் பார்வை* | 16-50 |

**மயிலை சீனி வேங்கடசாமி**

| | |
|---|---|
| *பழங்காலத் தமிழர் வாணிகம்* | 16-00 |

**செ. அரங்கநாயகம்**

| | |
|---|---|
| *சோவியத் நட்புறவுப் பயணம்* | 13-00 |

**இ. சுந்தரமூர்த்தி**

| | |
|---|---|
| *இலக்கியமும் பண்பாடும்* | 13-00 |
| *வான்மறை வள்ளுவம்* | 12-00 |

**சு. சமுத்திரம்**

| | |
|---|---|
| *ஏவாத கணைகள்* | 20-00 |

**சு. பாலச்சந்திரன்**

| | |
|---|---|
| *இலக்கியத் திறனாய்வு* | 35-00 |

**அ. அ. மணவாளன்**

| | |
|---|---|
| *அரிஸ்டாடிலின் கவிதையியல்* | 27-00 |

**கே.ஏ. குணசேகரன்**

| | |
|---|---|
| *நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும்* | 40-00 |

**பி. ஸ்ரீ**

| | |
|---|---|
| *மனோன்மணீயம்* | 40-00 |

**பொன்னீலன்**

| | |
|---|---|
| *கொள்ளைக்காரர்கள்* | 23-00 |
| *கரிசல்* | 25-00 |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,**
**சென்னை-600 098.**

Code No. A 479 ISBN 81-234-0090-X